வருட சந்தா.

1 வருஷத்திற்கு 6—0—0
மலேயா 11—0—0

# ஆஸாத்

ஆசிரியர்கள்:-
ஹகீம் சகோதரர்கள்.

—(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை கும்பகோணம்.)— விலை 2 அணா.

மலர் 1. சர்வஜித்து௵ தை௴ 20௳ 2—2—1948 21௳ ரபியூலவ்வல்௴ ஹிஜிரி 1367. இதழ் 2.

## அணையா அன்புச்சுடர் மஹாத்மாஜி
## —: மாளமுடியாது. :—

மஹாத்மா காந்திஜியின் பூதவுடல் நம் கண்களைவிட்டு வெளியேறிவிட்டது. உலகமெங்கிலும் சோகமே சோகம். அண்டமதிரக் கதறிப் புலம்பினும், நெஞ்சுக் குமுறல் அடங்குமா! சமுத்திரம்போல் கண்ணீர் வடிப்பினும் பற்றி எரியும் உள்ளம் அணையுமா! ரத்தக் கண்ணீரால் இந்திய சரித்திரத்தில் வரையப்படும் நெஞ்சைப் பிளக்கும் துக்ககரமான இச்சம்பவத்தை வருங்கால சந்ததிகள் கண்ணீர் சொரியும் கண்களைக் கொண்டு படிக்கப்போகின்றனர்.

மஹாத்மா சுட்டுக் கொல்லப்பட்டார் என்று எழுதுவதற்கும் நமக்கு துணிச்சல் உண்டாகவில்லை. மரணம் அடைந்தார் என்று சொல்ல நாவெழவில்லை. நம்மீது உத்தமர் கொண்டிருந்த அபார அன்பும், அவர் மீது நமக்கிருக்கும் அளவற்ற பக்தியுமே அதற்குக் காரணம். அன்புக்களஞ்சியம் அஹிம்சா மூர்த்தி காட்டுமிராண்டித் தனமாக சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக்கேட்டு உலகமே திகைத்துவிட்டது மக்களுக்காக பதினைந்து முறை பட்டினி கிடந்து வற்றிய வயிறு முடிவில் துப்பாக்கி ரவைக்கா இலக்காக வேண்டும்!

மஹான்களுக்கு நன்றிகெட்ட உலகம் செய்திருக்கும் கைமாறுகளை நாம் சரித்திரத்திலே படித்துள்ளோம். மஹாத்மா மிகப்பெரிய ஒரு மஹான். பல நூற்றாண்டுகளுக்கிடையே இம்மாதிரியான உத்தமரை உலகம் கண்டதில்லை. காணப்போவதுமில்லை. ஏசுநாதரின் அன்பு, புத்தரின் அஹிம்சை, முகம்மது நபியின் சமதர்மம், கீதையின் நல்லுபதேசத்திற்கு மஹாத்மா ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினார். பலாத்காரத்தை அன்பினால் முறியடித்தார். வகுப்புவாத இருளை சமதர்ம பிரகாசத்தினால் போக்கினார். அதர்மத்தை தர்மத்தால் வென்றார். ஆயுத பலம் கொண்ட ஏகாதிபத்தியத்தை அஹிம்சா காண்டீபம் கொண்டு தகர்த்தார். துப்பாக்கியால் சுட்ட கொலை பாதகனையும் பார்த்து புன்னகை பூத்தார் காந்தி மஹான். இதற்குமுன் தோன்றிய மஹான்களுக்கு நன்றிகெட்ட உலகம் செய்திருக்கும் அதே கைமாறு மஹாத்மாவுக்கும் செய்துவிட்டது. இந்த உலகத்தின் நிர்மூல சக்தி மஹாத்மா காந்தியின் பூதவுடலை அழிக்க முடியுமே ஒழிய அவருடைய ஆத்மீக ஒளியை அணைத்து நிர்மாண லட்சியத்தை குலைத்துவிட முடியாது. உத்தமரின் வயிற்றிலே பாய்ந்த குண்டு நம்முடைய உள்ளங்களை உடைத்துவிட்டது என்றாலும், நம் ஹிருதயங்களிலே குடிகொண்டிருக்கும் மஹாத்மாவை அது கொன்றுவிடவில்லை. நாம் மஹாத்மாவை இழக்கத் தயாராயில்லை. இழக்கவும் மாட்டோம். பூதவுடலின் மறைவு நம்மிடத்திலிருந்து மஹாத்மாவை பிரித்துவிட முடியாது. பிறப்பவர் யாவரும் இறப்பதுறுதி என்னும் வெற்றியை பரிபூரணமாக அடைந்த மஹாத்மா இனி நம்முடைய சிந்தனைகளிலே அமரராய் சஞ்சரிப்பார். நம்முடைய பேச்சிலே தொனிப்பார். நம்முடைய செயல்களிலே பிரதிபலித்துக் கொண்டிருப்பார். அவர் வாழ விரும்பிய 125 வருஷங்கள் மட்டுமல்ல பல்லாயிரம் வருஷங்களுக்கு பிறகும் அவர் பிரகாசித்துக் கொண்டிருப்பார். அவருடைய ஆத்மீக தியாகம் இந்தியர்களுக்கு மட்டுமின்றி உலகத்திற்கே வழிகாட்டியாக இருந்து வரும் என்பது நிச்சயம்.

அவரை நாம் என்றுமே விசுவாசிப்போம். அவருடைய லட்சியம் வெற்றியடைய உழைப்பதற்கு நம்மையே அர்ப்பணிப்போம். அவருடைய லட்சியத்தின் வெற்றியில் உலக வெற்றி, அவர் விடுத்த சமாதான தூதில் உலக சமாதானம், அவருடைய வாழ்க்கை சித்தாந்தத்தில் மானிட வாழ்க்கையின் மர்மம் அடங்கியிருக்கிறது. ஜாதி மத வித்தியாசமின்றி மக்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்ற அவருடைய உயரிய சித்தாந்தம் வளர்க்கப்படவேண்டும். அன்பு ததும்ப வேண்டும். சமதர்மம், சகோதரத்துவம் ஓங்கவேண்டும்.

ஒருநாள் நிச்சயம் அழியவேண்டிய சரீரத்திற்கு ஏற்பட்ட துன்பத்திற்காக சகல மதத்தினரும், எல்லா சமூகத்தினரும், பல்வேறு கட்சியினரும், பரஸ்பர வித்தியாசங்களை மறந்து ஒன்று சேர்ந்து சோகித்தோம். துக்கப்பட்டோம். கண்ணீர் வடித்தோம். அவரது லட்சியம் வெற்றியடைய பிரார்த்தனைகளை நடத்தினோம்.

ஆத்மாவுக்கு அழிவில்லை. அது அமரத்துவம் வாய்ந்தது. இன்று மஹாத்மாவின் உடல் மறைந்துவிட்டபோதிலும் அவருடைய ஆத்மா இருந்து வருகிறது. நம்மை அது பார்த்துக் கொண்டிருக்கிறது. வாழ்க்கை முழுவதும் உழைத்த அவருடைய லட்சியம் நம்மால் அலட்சியம் செய்யப்படுவதைப் பார்த்து மஹாத்மாவின் ஆத்மா வேதனை அடையாமல் இருக்கும்படி நாம் நடந்து கொள்ளவேண்டும்.

இந்தியர்களாகிய நாம் அனாதைகளாகிவிட்டோம் நமது தந்தையை இழந்துவிட்டோம். தகப்பன் இருக்கும்வரை சகோதரர்கள் சண்டையிட்டுக்கொள்வதும் பொறுப்புணராமல் இருப்பதும் சகஜம். சகோதர சண்டையை தீர்த்துவைக்க தகப்பனால் முடியும். ஆனால் இனி அவ்வாறில்லை. நமக்கு நாமே பொறுப்பு. நம் சகோதர சண்டைகள் அருமை தந்தையின் உடலுக்கு உலைவைத்துவிட்டன. நம்மைப்போல் துரதிஷ்டசாலிகள் யாரும் இருக்கமுடியாது. மஹாத்மாவை பெற்றெடுத்த இந்த நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் தனிப்பெருமை உண்டு. அதை நாம் இழந்துவிட்டோம். வருங்கால சந்ததிகள் நம்மை சபித்துக் கொண்டிருக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிட்டோம். இந்திய பூமி. பெருமிதத்துடன் தாங்கிக் கொண்டிருந்த மஹானை இழந்துவிட்டது. புருஷோத்தமன் நடமாடுவதைப் பார்த்துப் பார்த்து பெருமையுடன் நிமிர்ந்து நின்ற இந்திய ஆகாயம் தலை கவிழ்ந்தது அந்நிய அடிமைத் தளைகள் தகர்ந்த பிறகு சொந்தக் குழந்தைகளின் சிந்தப்படும் ரத்தத்தால் நனைந்து வேதனையுற்றிருந்த இந்தியத் தாய் நம்பியிருந்த: தன்னை விடுவித்த உத்தமரையும் இழந்து அலங்கோல காட்சி அளிக்கின்றாள். வேற்றுமைகளுக்கு பலி கொடுக்க தாயைத் தவிர இனி நம்மிடம் வேறொன்றும் இருக்கவில்லை.

மஹாத்மாவின் ஆத்மீக தியாகம் நம்மை நேர்வழிப் படுத்தவில்லையென்றால் உலகத்தில் வாழ நமக்கு உரிமையில்லை. சமாதான தூதரின் தியாகம் உலக சமாதானத்தை நிலைநாட்டும். சொல்லும் செயலும் ஒன்றுபட்ட சத்திய சீலரின் வாழ்க்கைத் தத்துவம் மக்கள் வாழ்க்கை கசடுகளைப் போக்கும். அன்பே உருவெடுத்த அன்புச்சுடர் உலகத்தில் என்றுமே பிரகாசித்துக்கொண்டிருக்கும். மனித ஒழுக்கத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய அவரது தூய்மை மானிட வர்க்கத்திற்கு ஒழுக்கம் கற்றுக்கொடுக்கும். தன் குழந்தைகளுக்காக ஒன்றும் வைக்காமல் நம் தந்தை சென்றுவிடவில்லை. அன்பு, அஹிம்சை, சத்தியம், தர்மம், சகோதரத்துவம், சமதர்மம், சகிப்புத் தன்மை, ஒழுக்கத்தின் பெரும் பொக்கிஷங்களை நமக்குக் கொடுத்துச் சென்றார். நாம் சரியான துறையில் அண்ணல் அளித்துச் சென்ற செல்வங்களை பிரயோஜனப்படுத்திக் கொண்டால் உலகத்திலேயே தலை சிறந்தவர்களாக விளங்கமுடியும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தது. இந்தியர்கள் அடிமை இழுக்கை அகற்றினர். உலகத்தின் முன் தலை நிமிர்ந்து நிற்க சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்தது என்றால் மஹாத்மாவின் சேவையும் உழைப்புமேதான் காரணம். வாழ்நாளில் சுதந்திர இந்தியாவைப் பார்த்த அண்ணல், சுபிட்ச சமதர்ம இந்தியாவைப் பார்க்கவில்லை. அவருடைய உள்ளத்திலே துடித்துக்கொண்டிருந்த அந்த ஆசை நிறைவேறாமல் போய்விட்டது. என்னுடைய உழைப்பின் பலனால் இந்தியா மலர்ந்து என்னுடைய குழந்தைகள் அதில் சுகமாக வாழுகின்றனர் என்று மட்டிலும் நமது தந்தை கண்குளிரப் பார்த்தபிறகு இந்த உலகத்தைவிட்டு சென்றிருந்தால் இன்று நமக்கு ஏற்பட்டிருக்கும் மனவேதனை ஓரளவு குறைந்திருக்கும் என்பது உண்மை. ஆயினும் தியாக மூர்த்தியின் ஆத்மீக தியாகம் இந்த நாட்டில் நாற்பது கோடி காந்திகளை தோற்றுவிக்கப் போதுமானது. ஒரு மஹான் காந்தியின் மறைவு நாற்பது கோடி காந்திகளை தோற்றுவிக்கும். இச்சம்பவத்திற்கு சரித்திரத்திலேயே சான்று இருக்கமுடியாது. தியாகமே உருவெடுத்த அவருடைய வாழ்க்கை இந்திய சரித்திரத்திற்கு ஜீவன் அளித்திருக்கின்றது என்றால் அண்ணலின் ஆத்மீக தியாகம் இந்திய வருங்கால சரித்திரத்தை உருவாக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது.

எனவே மஹாத்மா காந்தியின் லட்சியம் மாள முடியாது. அதற்கு அழிவில்லை. எந்த சக்தியும் அதைத் அழித்துவிடுவதற்கில்லை. அவருடைய லட்சியத்தை

கும்பகோணம் முனிசிபாலிடி.

மாசி மகம் உத்ஸவம் 1948

அகில இந்திய சுதேசி இண்டஸ்டிரியல்

(முனிசிபல்)

பொருள்காக்ஷி

9—2—48 முதல் 4—3—48 முடிய

பொற்றாமரை தென்கரை அரண்மனைத் தோட்டத்தில் அழகாக நிர்மாணிக்கப்பட்ட பந்தலில்

சங்கீதக் கச்சேரிகளும்,

அகில இந்திய உற்பத்தி சாமான்களும், மற்றும் கைத்தொழில், நெசவு, சுகாதார சம்பந்தமான காட்சிகளும் அதிவிமரிசையாக நடைபெறும்.

— ஸ்டாலுக்கு முந்துங்கள். —

எல்லா விபரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசததிற்கு எழுதவும்.

— காரியதரிசிகள், எக்ஸிபிஷன் கமிட்டி, —

முனிசிபல் ஆபீஸ் கும்பகோணம்.

எதிர்ப்பவர்கள் தங்களையே அழித்துக் கொள்பவர்களாவர். அவர்கள் அழிவார்களேயன்றி மஹாத்மாவின் லட்சியம் அழியமுடியாது. உலகம் உள்ளளவும், நாமும் பிற்கால சந்ததிகளும் மஹாத்மாவை கௌரவிப்பது நம் கடமை. கண்ணீர் வடித்து கதறிப் புலம்பாமல் இருக்க முடியாது என்பது உண்மைதான். அத்துடன் நாமிருந்துவிட்டால் மஹாத்மாவை கௌரவித்தவர்களாக ஆகிவிடமுடியாது. அவருடைய உபதேசங்களை மறவாமல் கடைபிடித்து நடந்து அவர் லட்சியம் வெற்றியடைய உழைப்பதே நம் அவருக்கு காட்டும் உண்மையான கௌரவமாகும். இறைவன் அன்னாரின் ஆத்மாவிற்கு சாந்தி அளிக்கும்படி நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

**வாழ்க மஹாத்மா! வாழ்க இந்தியா!!**

**வாழ்க மானிட வர்க்கம்!!!**

---

## அனுதாபத்திலுமா குதர்க்கம்!

மஹாத்மாஜீ மறைவுகுறித்து பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் அனுதாபம் தெரிவிக்கையில் "ஹிந்து சமுதாயத்தின் நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் பாத்திரமான மிகப்பெரிய தலைவர்" என்று கூறியுள்ளார்.

மஹாத்மாஜீயின் மறைவால் உலகமே அதிர்ச்சியுற்றிருக்கிறது. கிழக்கத்திய, மேற்கத்திய நாடுகள், மட்டுமின்றி உலக முஸ்லிம் நாடுகள் அனைத்தும், ஏன் சில பொருப்பு வாய்ந்த பாகிஸ்தான் தலைவர்களும்கூட மஹாத்மா மனிதவர்க்கத்தின் தலைவர் என்றும் மனிதவர்க்கத்தின் நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் பாத்திரமானவர் என்றும் அறிவித்திருக்கின்றனர். மிஸ்டர் ஜின்னா மட்டிலும் இரண்டு சமுதாயக்கொள்கையையும், மஹாத்மா ஹிந்து தலைவர் என்ற தன்னுடைய குதர்க்கவாதத்தை கட்டி அழுவது அவரது நெஞ்சழுத்தத்திற்கு எடுத்துக் காட்டாகும். இந்திய முஸல்மான்களின் மனதை மிஸ்டர் ஜின்னா புண்படுத்திவிட்டார். அனுதாபம் தெரிவிக்காமல் அவர் வாயை மூடிக்கொண்டிருந்தால் நலமாய் இருந்திருக்கும்.

கராச்சியிலிருந்து விஷத்தைக் கக்குவதை நிறுத்திவிட்டு சிரமத்தைப் பொருட்படுத்தாமல் இந்தியாவுக்கு விஜயம்செய்து மஹாத்மாஜீயின் மறைவால் இந்திய முஸல்மான்கள் அடைந்துள்ள அதிர்ச்சியையும் தகப்பனை இழந்த குழந்தைகள்போல் அவர்கள் தவிப்பதையும் பார்க்கும்படி மிஸ்டர் ஜின்னாவை அழைக்கின்றோம்.

மிஸ்டர் ஜின்னாவுடன் இந்திய முஸல்மான்களுக்கு அவர் ஊட்டிய மயக்கமும் அகன்றுவிட்டது.

நண்பர்கள் யார்? விரோதிகள் எவர் என்று அவர்கள் உணர்ந்துவிட்டனர். தன்னலமற்ற மாபெரும் தியாகியின் ஆத்மீகத் தியாகம் சூரியன் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கையில் மிஸ்டர் ஜின்னாவின் விஷமப் பிரசாரம் உலக கண்களில் மண்ணைத் தூவி விட முடியாது.

காயிதே ஆஜம் என்றும் பத்து கோடி முஸ்லிம்களின் ரட்சகர் என்றும் சுயநலக் கூட்டம் செய்த பிரசாரத்தில் மயங்கி பாகிஸ்தானைக் கண்மூடித்தனமாக ஆதரித்த இந்திய முஸ்லிம்கள் இன்று பாகிஸ்தானிடமிருந்து எவ்வித பிரதிப் பிரயோசனத்தையும் எதிர்பார்க்கவில்லை. பாகிஸ்தானால் இந்திய முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாது, அதற்கு பாகிஸ்தானிகள் தயாராகவும் இல்லை என்று அவர்கள் நன்றாய் கண்டுகொண்டுவிட்டார்கள். அதை குறித்து அவர்கள் குறை கூறவும் விரும்பவில்லை. தங்கள் பைத்தியக்காரத்தனத்தை எண்ணி ஏங்கவும் அவர்களுக்கு அவகாசம் இல்லை.

ஆனால் இந்திய முஸல்மான்கள் சார்பில் மிஸ்டர் ஜின்னாவிடம் கேட்டுக்கொள்ளுவது ஒன்றுதான். இந்திய முஸல்மான்களைப் பொருத்தவரையில் இரண்டு சமுதாயம் என்ற விஷத்தை கக்குவதோ, அவர்களைத் தட்டிக்கொடுப்பதோ, அவர்களைக்குறித்து அனுதாபப்படுவதோ அவர்கள் நசுக்கப்படுகின்றனர் என்று முதலைக் கண்ணீர் வடிப்பதோ வேண்டாம். நீங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தாலே போதும் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி அதுதான். எங்களை பலியிட்டு வாங்கிய பாகிஸ்தானை எங்களை பலியிட்டே நிலைநிறுத்த முயற்சிகக வேண்டாம். அவ்வளவு செய்தால் போதும். நாம் கடமைபபட்டவர்களாக இருப்போம்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# புனர் வாழ்க்கை.

(o)

## மீண்டும் ஐக்யம்

இந்திய பிரிவினையால் படிப்பினைக்குரிய பயங்கர விளைவுகள் ஏற்பட்டுவருகின்றன அளவு, அவசியத்தைவிட பிரிவினைக்கு எவ்வளவோ அதிக விலையும், பலியும் கொடுத்தாய்விட்டது என்று ஒவ்வொருவரும் உணர ஆரம்பித்து விட்டனர். இத்துடன் இது நின்று விடப்போவதுமில்லை. இது ஆரம்பம்தான் பிற்காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் பிரிவினையால் நாசமே ஏற்படும் என்பது நிச்சயம். எனவே இந்த இதழில் இந்தியாவையும், பாகிஸ்தானையும் மீண்டும் ஐக்கியப்படுத்துவது ஒன்றுதான் இதற்கு சிறந்த பரிகாரம்என்பதை விளக்க விரும்புகிறோம்.

"நிரபராதி பெண்கள், குழந்தைகள் கொல்லப் படுவதைக் காட்டிலும் நாடு பிரிக்கப்படுவது மேல்" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கூறினார். பிரிவினைக்குப் பிறகும் கொலைகள் குறையவில்லை. அதிகரித்தன. இதுவரை பல லட்சம் பேர் கொல்லப்பட்டனர் இந்தியா, பாகிஸ்தான் இரண்டிலும் ஒரு கோடிக்கு மேல் மக்கள் வீடிழந்து தவிக்கிறார்கள். இந்திய நாலரைக்கோடி, பாகிஸ்தான் இரண்டரைக்கோடி சிறுபான்மையோர் உயிர்ப்பிணங்களாகி விட்டனர் எதிர்கால பயங்கரத்தை எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் புலப்படவில்லை. எனவே சில ஆயிரம் ஜனங்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்க பிரிவினை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும்போது ஏழு கோடி மக்களைக் காப்பாற்ற என்னதான் செய்தாலும் அது நியாயமேயாகும். பாகிஸ்தானில் நிலைகெட்டு அலையும் 65 லட்சம் இந்திய முஸ்லிம் அகதிகளும், இந்தியாவில் திரியும் 55 லட்சம் பாகிஸ்தான் பிரதேச ஹிந்து, சீக்கியர்களுமே பிரிவினை சரியல்லவென்று எடுத்துக் காட்டுவதற்கு போதுமான நடமாடும் ஆதாரங்களாகும். ஒரு கோடிக்கு அதிகமான இவர்களே மீண்டும் இந்தியா. பாகிஸ்தான் ஒன்றாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தும் முதல்தர பிரசாரகர்களாக விளங்குகின்றனர்.

### அழிவுதான் மிச்சம்

பாகிஸ்தானில் இனி ஹிந்து, சீக்கியர்கள் இருக்கமுடியாது என்று தெளிவாய்விட்டது. பதில் நடவடிக்கை என்னும் உணர்ச்சி தலைதூக்கி வருவதைப் பார்த்தால் இந்தியாவில் முஸ்லிம்கள் இருக்க முடியாமலும் போகலாம் இந்நிலையில் நாலரைக் கோடி முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு ஓடுவதென்றால் மரணத்தின் தன்மையும், கொலைசெய்யும் கைகளும் தான் மாறுமேயொழிய அங்கும் அவர்களுக்கு மரணத்தைத் தவிர வேறு ஒன்றும் காத்திருக்கவில்லை. அது மட்டுமின்றி அவர்கள் அழிவதுடன் பாகிஸ்தானையும் சேர்த்துக் கொண்டு அழிவார்கள். இன்று பாகிஸ்தானிலிருக்கும் அகதிகளுக்காக தினம் ஒன்றுக்கு பல லட்ச ரூபாய் பாகிஸ்தான் சிலவு செய்து கொண்டிருக்கின்றது. மேற்கு பாகிஸ்தானின் வருஷ வருமானம் 33 கோடி ரூபாய்தான் எனவே இந்திய நாலரைக் கோடி முஸ்லிம்களுக்கு மரணத்தைத் தவிர வேறு வழியில்லை. இந்திய முஸ்லிம் வாலிபர்கள் கோஷித்த "பாகிஸ்தான் அல்லது மரணம்" என்ற கோஷத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடவில்லை. இன்று பாகிஸ்தான் அவர்களுக்கு மரணமாகவே அமைந்துவிட்டது

பரிவர்த்தனை. மரணம் இரண்டையும் விட்டு மூன்றாவது வழியும் ஒன்றுண்டு. ஆனால் அதை நினைக்கும்போதே மயிர் கூச்சல் உண்டாகின்றது. அதாவது நாலரைக் கோடி முஸ்லிம்களின் சுத்தி. இதைக் கேட்டு லீக் அன்பர்கள் கலவரம் அடைய வேண்டியதில்லை இவ்விதம் நடக்காது என்று எண்ணிவிடவும் முடியாது. வட இந்தியாவின் சில இடங்களில் இந்த வேலை ஆரம்பமாகியும் விட்டது. ஆயுதம் தாங்கிய பெருங்கூட்டம் ஒன்று படையெடுத்து வந்து சுத்தி அல்லது சாவு என்று சவால் விடுத்தால் பாமர முஸ்லிம் ஒருவன் என்ன செய்வான்? சுத்திக்கு சம்மதிக்காமல் குழந்தைகள், பெண்கள் கொல்லப்படுவதையும், வீடு பொசுக்கப்படுவதையும் முடிவில் தன் உயிருக்கே ஆபத்து ஏற்படுவதையும் ஏற்கக் கூடியவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்? நடுத்தர அந்தஸ்துள்ளவர்கள் உயிர்விடுவார்கள் என்பது நிச்சயம் ஆனால் பாமர பொது முஸ்லிம்கள் இதில் எந்த அளவுக்குத் தேறுவார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

### அமைதி நிலைக்குமா!

கலவரங்கள் அடங்கிவிட்டதாக நினைப்பதற்கும் இல்லை திரும்பவும் அவை மீளக்கூடும். பெரும் அளவில் நடப்பதும் சாத்தியமே. பாகிஸ்தானி

( 14-ம் பக்கம் பார்க்க. )

# முன்னேற்றப் பாதை

## ஷைகுல் இஸ்லாம் மௌலானு மதனியின் பொதுப் பிரகடனம்.

பாஞ்சால கலவரங்களால் ஐக்கிய மாகாண மேற்கு பாகம் பாதிக்கப்பட்டு பொது மக்கள் பீதி, ஏமாற்றம் அடைந்த சமயத்தில் ஷைகுல் இஸ்லாம் மௌலானு ஹுஸேன் அஹ்மத் மதனி அவர்கள் தேவ்பந்தில் அரியதோர் பிரசங்கம் செய்தார் ஜனங்களிடையே ஏற்பட்டிருந்த பீதியைப் போக்கி நம்பிக்கை உண்டாக்க அவருடைய பேச்சு பெரும் அளவு உதவிசெய்திருக்கிறது. மாகாணத்தின் பாதிக்கப்பட்டிருந்த அப்பிரதேசத்தில் இன்று நிலவிவரும் அமைதி, சமாதானம் மௌலானு மதனியின் அரிய பிரசங்கத்தின் பலனேயாகும். அதை கீழே தருகிறேம்:—

**சகோதரர்களே ! பெரியோர்களே !**

ஆகஸ்டு 15க்குப் பிறகு அந்நிய சூனாட்டத்தின் அடிமையிலிருந்து பெரும் அளவுக்கு நாம் விடுதலை அடைந்தோம் தேசமுன்னேற்றம், பொதுநன்மை, மக்களின் வாழ்க்கைத் தரம், உயர உழைப்பதற்கு போதுமான அளவு சுதந்திரம் நமக்குக் கிடைத்தும் இருக்கிறது நம் நாடும் விடுதலை அடைந்துவிட்டது. இன்று மத்தியிலும், மாகாணங்களிலும் பொறுப்பாட்சிதான் நடந்து வருகின்றது ஆயினும் பூரண சுதந்திரம் இன்னும் நமக்குக் கிடைத்துவிடவில்லை. நம்மிடையே ஆங்கிலேய அரசியல் சூழ்ச்சி இன்றைக்கும் வேலை செய்து கொண்டுதான் இருக்கின்றது பழைய நிர்வாக யந்திரம் இதுவரை அப்படியே இருந்தும் வருகின்றது பெரிய பெரிய நவாபுகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள் நமக்குள் பிளவு உண்டாக்கி கலவரங்களை தூண்டுவதில தீவிரமாய் முனைந்திருக்கின்றனர். நம் அரசியல் சமுதாய வாழ்க்கையில் இந்த வர்க்கம் இருந்து வரும் வரையில் நாம் பூரண சுதந்திரம் அடைந்துவிட்டதாக எண்ணுவது தவறு பிரிட்டிஷ் ஏஜண்டுகள், வெள்ளை ஆட்சியின் பழைய ஊழியர்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள் முதலியோரின் பித்தலாட்டம் நம் தேசத்தை கொலை, கொள்ளை, கலவரம் போன்ற நாசகரமான நரகத்தில் சிக்கவைத்து விட்டது. தேசத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்த மக்களின் அமைதியான வாழ்க்கையையே குலைத்து அவர்கள் சுதந்திரத்தின் உண்மையான சுகம் அனுபவிக்க முடியாமல் செய்து விட்டார்கள் அவர்களுடைய சூழ்ச்சிகளால் நிர்வாகமே ஸ்தம்பித்து தேசத்தின் நலனை நாடுபவர்கள் செயலற்று போய்விட்டனர் இவ்வித சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு பொது மக்களாகிய உங்களிடமே சக்தி இருக்கிறது நிலைமையை சரிவர உணர்ந்து கொண்டு கடவுளை நம்பி கலகக்காரர்களை எதிர்த்து முறியடிக்கும் வேலையில் முனைந்தால் உங்கள் நாட்டையும் மக்களையும் அமைதியற்ற நரக வேதனையிலிருந்து உங்களால் மீட்க முடியும். சூழ்ச்சிக்காரர்களை முறியடிக்கவும் முடியும்.

**அழிவின் காரணங்கள்.**

நிலைமையை நுட்பமாக பரிசீலனை செய்து பார்த்தால் அமைதியற்ற வருந்தத் தக்க இன்றைய நிலைமைக்கு சுயநலக்கார பிற்போக்காளர்களே காரணம் என்பது உங்களுக்கு நன்கு புலப்படும். பிரிட்டிஷ் ஏஜண்டுகள் பிற்போக்காளர்கள் மக்களிடையே துவேஷத்தை [illegible] வந்தார்கள். ஒருவரை இன்னொருவருக்கு விரோத[illegible] ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் தூண்டிக்கொண்டே ஆயுதங்களும் பட்டுவாடா செய்யப்பட்டன இந்தியாவின் பல மாகாணங்களில் இம்மாதிரியான ஏஜண்டுகள் கையும் களவுமாக பிடிபட்ட பிறகு இந்த விஷயம் இனி மர்மமாக இருக்கவில்லை இவ்விதமே ராஜா, மகாராஜாக்கள் ஏழை பொதுமக்களை நசுக்கி தங்கள் சமஸ்தானங்களை விஸ்தரித்துக்கொள்ளவும், நிலைநாட்டிக் கொள்ளவும் கலகக்காரர்களை ஆயுதபாணிகளாக்கினர் ஹிந்து, முஸ்லீம் ஜமீன்தார்களும், முதலாளிகளும் சுயநலத்துக்காக மக்களை மதத்தின் பெயரால் தூண்டினர். குண்டர்களைத் திரட்டி ஆயுதங்களும் அளித்து பண உதவியும் செய்தனர். கொலை கொள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தலைகளின விலை நிர்ணயிக்கப்பட்டது. வெள்ளை அதிகாரிகள் கலவர சூழ் நிலையை உண்டாக்கிவிட்டு மூண்ட கலகங்களை தடுப்பதற்குரிய தங்கள் கடமைகளையும் தட்டிக் கழித்தார்கள். அனேக அதிகாரிகள் கலகங்களில் பகிரங்கமாக பங்கெடுத்தும் கொண்டார்கள். எனவே இந்த மோசக்காரர்களின் நாச வேலைகளின் சூழ்ச்சி வெகுதூரம் பரவிற்று. பொறுப்பு வாய்ந்த சில நிர்வாகிகளும் கூட அதில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கம், பொது மக்கள் இரண்டின் கவனத்தையும் வேறு பக்கத்திலே திருப்பிவிட்டு விடுதலைக்குப் பிறகு நிர்மாணத்துறையில் கவனம் செலுத்துவதற்கு கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தை வீணுக்குவதே அவர்களின் நோக்கம். ஜமீன்தார்கள், முதலாளிகளின் பாபகரமான உல்லாசவாழ்க்கை அப்பொழுது தான் பூக்கவும் காய்க்கவும் முடியும். நாசத்தையே கொடுக்கும் இவ்வித சூழ்ச்சிகளில் அநேக ஏழை பாமர மக்களும் சிக்கி மோசக்காரர்களின் கை ஆயுதமாக மந்திர சக்திக்கு கட்டுப்பட்டவர்கள் போல் நடந்துக் கொள்வது இந்த நாட்டின் துரதிஷ்டமே ஆகும்

**மதத்தின்பெயரால் காட்டுமிராண்டித்தனம்**

நடந்தேறிய அனைத்தும் மதம், தர்மம் என்ற பெயரால் செய்யப்பட்டது தான் எல்லாவற்றையும்விட அதிகமாக

வெட்கப்படவேண்டியதோர் விஷயம். மானிட தர்மத்திற்கும் நடந்தவைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்பது நிச்சயம். காட்டுமிராண்டித்தனம், மிருகத்தனத்தை போதிக்கக்கூடிய மதம் உலகத்தில் ஏதாவது ஒன்று உண்டா? மனிதத்தன்மை, ஒழுக்கம், இவ்வித மிருக சுபாவத்தையும், விலங்கினக் கொடுமைகளையும், ஏற்க முடியுமா; தொண்டு கிழவர்களையும், பாபமற்ற குழந்தைகளையும், நிரபராதி பெண்களையும், சக்தியற்ற நோயாளிகளையும், கோழைத்தனமாக கொல்ல ஏதாவது ஒரு மதம் போதிக்கின்றது என்றால் அது மதமேயல்ல. சாபமேயாகும். அந்த சாபம் சீக்கிறமே அழிந்தாக வேண்டும்.

### இஸ்லாம் போதிப்பது என்ன!

இதர மதங்களைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆயினும் இம்மாதிரியான காட்டுமிராண்டித்தனம், மிருகத்தன்மையை எந்த மதமும் அனுமதிக்க முடியாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகையால், எக்காரணத்தைக்கொண்டும் ஒரு விநாடிக்கேனும் இம்மாதிரியான செய்கைகளை அனுமதிக்க வில்லை என்று இஸ்லாம் சம்மந்தப்பட்டவரையில் பட்டவர்த்தனமாக அறிவிக்க ஆசைப்படுகிறேன். இஸ்லாம் அன்பு, கருணை, அமைதி, சமாதானம் இவைகளையே போதிக்கின்றது. ஈமானும், கொடுமையும் ஒன்றுசேர முடியாது.

### திரு குர் ஆன் கூறுவது என்ன?

"ஜனங்கள் பேரில் கருணை செய்யாதவன்மேல் அல்லாஹ் கருணை செய்வதில்லை. கருணையுள்ளவர்கள் பேரில் அளவுகடந்த கருணையுள்ளவன் கருணைசெய்கிறான். உலகத்தோர் மீது கருணை செய்யுங்கள். வானுலகத்தான் உங்கள் மீது கருணைசெய்வான்.

எதிரிகளுடன் நடக்கும் யுத்தத்திலும் கூட குழந்தைகள், பெண்கள், கிழவர்கள், பலஹீனர்களைக் கொல்ல இஸ்லாம் அனுமதிக்கவில்லை. போர் வீரர்களை யுத்தத்திற்கு வழி அனுப்பும்பொழுது நபி பெருமானார் கீழ்வருமாறு உபதேசித்தார் :-

"கிழவர்களையோ, குழந்தைகளையோ, பெண்களையோ கொலைசெய்யவேண்டாம்"

அக்கிரமத்திற்கு அக்கிரமம் திருப்பிச்செய்யப்படுவதையும் நபி அவர்கள் விரும்பவில்லை.

"ஜனங்கள் நமக்கு நன்மை செய்தால் நாமும் பதிலுக்கு நன்மை செய்வோமென்று ஒழுக்கமிழந்து சொல்ல வேண்டாம். அப்படியானால் அவர்கள் அக்கிரமம் செய்தால் நீங்களும் அக்கிரமம் செய்வீர்களா? மக்கள் நன்மை செய்தால் நீங்களும் நன்மை செய்யுங்கள். அவர்கள் அக்கிரமம் செய்தாலும் நீங்கள் அக்கிரமம் செய்யவேண்டாம். இந்த முடிவின் மீது உறுதியுடன் நீங்கள் நில்லுங்கள்"

பொதுவாக எல்லோருடனும் நேர்மையுடன் நடக்கும்படி நபி அவர்கள் போதிக்கையில் :—

"சிருஷ்டி அனைத்தும் கடவுளின் குடும்பமாகும். அவருடைய குடும்பத்திற்கு நன்மை செய்பவனே எல்லாவற்றையும் விட அதிகமாக கடவுளால் நேசிக்கப்படுவான்"

மனிதனுடன் மட்டுமின்றி மிருகங்களுடனும் அன்பாகவும், பிரியமாகவும் நடக்கும்படியும் அவைகளை நெருப்பினல் சுட்டு தொந்திரவுசெய்ய வேண்டாமென்றும் திட்டமாக இஸ்லாம் போதிக்கின்றது. அண்டையில் இருப்பவர்களுடன் நடந்துகொள்ளவேண்டிய முறையை வற்புறுத்தி கூறுகையில் நபி அவர்கள் சொன்னதாவது:—

"கடவுளின் ஆணை அவன் ஈமானுள்ளவனாக முடியாது. கடவுளின் ஆணை அவன் ஈமானுள்ளவனாக முடியாது. கடவுளின் ஆணை அவன் ஈமானுள்ளவனாக முடியாது" ஒருவர் "ஓ அல்லாஹ்வின் ரசூலே! எவன்" என்றார். "எவனுடைய அண்டையிலிருப்பவர்கள் அவனுடைய தொல்லைகளினல் அமைதியுடன் இல்லையோ அவன்" என்று பதிலளித்தார்.

இஸ்லாமின் இவ்வித சீரிய போதனைகளை புறக்கணித்து இஸ்லாமின் பெயரால் இஸ்லாமுக்குப் புறம்பான காரியங்களைச் செய்தவர்கள் இஸ்லாமுக்கு களங்கத்தையே உண்டுபண்ணி இருக்கின்றனர். மதத்துக்கு சேவை செய்வதற்கு பதிலாக அவர்கள் மதத்தையே குழி தோண்டி புதைத்திருக்கின்றனர்.

### மனித சுபாவத்தை இழிவுபடுத்தும் செய்கைகள்

மதங்களில் அன்பு நிறைந்த போதனைகள் இருக்கவே செய்கின்றன. அவை ஒருபுறம் இருக்கட்டும். மானிட பண்பாடு, ஒழுக்கம் சம்மந்தப்பட்டவரையில் இம்மாதிரியான செய்கைகளைக் குறித்து எந்த ஒரு மனிதனாவது பெருமைப்பட முடியுமா? என்று அறிய ஆசைப்படுகிறேன். சக்தியற்ற பெண்கள், குற்றமற்ற குழந்தைகளை வெட்டி வீழ்த்தி, வீரம் கௌரவம் நிலைநாட்ட முடியுமென்று யாராவது எதிர்பார்க்கக்கூடுமா? காயமுற்று கிடப்பவர்களையும், நோயாளிகளையும் கொலைசெய்து சூரர்கள் ஆகிவிடலாமென்று நம்ப இடமுண்டா? சமாதுகளையும், கபரஸ்தான்களையும் இடித்து ஸ்மசானத்தில் வெற்றிக்கொடி நாட்ட முடியுமேயல்லாது ரணகள வீரர்கள் ஆகமுடியாது. கலவரங்களின்போது நடந்தேரிய காரியங்கள் மனித ஆத்மா மட்டுமின்றி மனிதசொரூபமும் வெட்கப்படத் தக்கவையாகும். விலங்குகளும் அவைகளின் நாக்குகளை பெண் உதிரத்தில் தோய்ப்பதில்லை. ஓநாய்களும் சிசுக்களைபராமரிக்கின்றன மிருகங்களும் பிணங்களை தீண்டுவதில்லை. ஆனல் வயிற்றிலுள்ள பிண்டங்களும், சமாதுகளிலுள்ள பிணங்களும்கூட தப்பமுடியாத அளவு கொடுமை நிறைந்த விலங்குகள் மனித ரூபத்தில் நடமாடிக்கொண்டிருப்பது இந்த நாட்டின் துரதிர்ஷ்டமாகும்.

இவ்வித ரத்தவெறிக்கும், மிருகத்தனத்திற்கும், சரித்திரத்திலேயே சான்று கிடையாது. உலகத்தின்முன் இந்தியாவை கேவலப்படுத்தியதோடு மட்டுமின்றி இந்த மானிட மிருகங்கள் மனிதனின் உயர்வு, பண்பாடு, ஒழுக்கம், முதலிய உயர் குணாதிசயங்களை இழிவு செய்திருக்கின்றன.

### வஞ்சமா? தற்கொலையா?

ஒரு சாரார் இன்னொருசாராரை ஈவிறக்கமின்றி அழிப்பதன்மூலம் வஞ்சம் தீர்த்துக்கொள்வதாக பெருமைப்படுகின்றீர்கள். ஆனால் சிந்தித்துப்பார்க்க நிதானபுத்தி இருக்கும்பட்சத்தில் இது வஞ்சமல்ல தற்கொலை என்பதை உணரமுடியும் இந்த நாசவேலைகள் எதிரிகளுக்கு மட்டுமின்றி நம்மையும் நாசமாக்கியிருக்கின்றன. நம் ஆத்மீக அமைதி, கலாசார, நாகரீக, பொருளாதார அமைப்பு இதனால் சீர்குலைந்துவிட்டது லட்சக்கணக்கில் குடும்பங்கள் நாடோடிகள்மாதிரி அலைந்து திரிகின்றன. தாய் தந்தைகளைப் பறிகொடுத்த சிசுக்கள், குழந்தைகளை இழந்த பெற்றோர்கள், ஏங்குகின்றார்கள் சகோதரர்களைவிட்டு பிரிந்த சகோதரிகள் பதிகளின் ஆதரவளிக்கும் கைகளை இழந்த சதிகள், உயிரிழந்து செல்வத்தை கொள்ளைகொடுத்து, மானமழிந்து தவிக்கின்றனர். பொதுவாகவாழ்க்கையின் பெரும பொக்கிஷம் கலகத்தீயால் பொசுங்கிவிட்டது. போக்குவரத்தில் ஏற்பட்ட தடையால் வாழ்க்கைக்கு அத்தியாவசியப் பொருள்கள் ஒருஇடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டுபோக முடியவில்லை.

விவசாயிகளின் அழிவால் உணவு உற்பத்தியும் தடைபட்டு, அமைதியின்மையால், உணவுப்பொருள்களை மார்க்கெட்டுகளுக்கு கொண்டுவர முடியாமல் போய்விட்டது வியாபார ஸ்தலங்கள் குட்டிச் சுவர்களாகவும், வயல்கள் வரண்டும் கிடக்கின்றன! உணவின்றி பல லட்சம் மக்கள் பட்டினி கிடக்கின்றனர் அத்துடன் வீடிழந்து தவித்துக்கொண்டுவந்து குவியும் கூட்டங்களால் நிர்வாகமேகுலைந்துவிட்டது எனவே ஒரு சாரார் இன்னொரு சாராரை மட்டிலும் அழிக்கவில்லை அதைவிட எவ்வளவோ அதிகமாக தங்கள் நாட்டையே அவர்கள் அழித்திருக்கின்றனர். இன்னிலையில் கலவரங்களை தடுக்க ஒரு சாரார் இன்னொரு சாராருடன் சகிப்புத்தன்மை, நேர்மையுடன் நடப்பது அவசியம் என்பது மட்டுமின்றி நம் வாழ்க்கையின் அமைதியை நாம் விரும்பினால், கலாச்சார' பொருளாதார அமைப்பு காக்கப்படவேண்டுமானால், விவசாயம், வியாபாரம் தொழில் முதலியவைகளைத் காத்து நமக்கு கிடைத்திருக்கும் சுதந்திரம் பறிக்கப்படாமல் மஹத்தான எதிர்காலத்தை உருவாக்கி நாட்டை புனர் நிர்மாணம் செய்ய நாம் விரும்பினால், பிரிட்டிஷார், ராஜாக்கள் முதலாளிகளின் சூழ்ச்சிகளில் அகப்பட்டு செய்யும் பைத்தியக்காரத்தனமான மிருகத்தனம் நின்றே ஆகவேண்டும். ஆகவே இந்த பிற்போக்கு கும்பலை எதிர்க்க பொது மக்களின் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பது நம்முடைய முதல் கடமையாகும். நம் வாழ்க்கையைக் குலைத்து நாட்டின் எதிர் காலத்தை பயமுறுத்திக்கொண்டிருக்கும் சூழ்ச்சிக்காரர்களை தவிடுபொடியாக்க பொதுமக்கள் சகிப்புத் தன்மையுடன் பரஸ்பரம் ஒத்துழைக்கவேண்டும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஜன்மவிழாவா? அல்லது க[illegible]ாட்டமா!

பாகிஸ்தானில்டிஸம்பர் 25, 26தேதிகளில் காயிதே ஆஜம் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஜூபிளியை நினைவூட்டும் தோரணையில் விழா வெகு சிறப்பாக நடந்தது. பிரதம மந்திரியாரின் வீட்டில், மந்திரிகள், உயர்தர சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பிரபல வியாபாரிகள், பெரிய மனிதர்களுக்கு விமரிசையாக விருந்து அளிக்கப்பட்டது. ராணுவ அணிவகுப்பும் நடத்தப்பட்டது. ஸ்பெஷல் களிக்கூத்து நிகழ்ச்சி ஒன்றுக்கு காராச்சி கிளப்பில் ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தான் சர்க்கார் காரியாலயங்கள் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டு இங்கொன்றும் அங்கொன்றுமாய் மசூதிகளில் காயிதே ஆஜமின் ஆயுள் விருத்திக்காக பிரார்த்தனைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், அரசியல் நடவடிக்கைகள் எங்கும் காணக்கிடைக்கவில்லை.

இந்தக் கொண்டாட்டத்தில் பாகிஸ்தான் பணம் பல [illegible] ரூபாய் சிலவழிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடி[illegible] உள்ளாயிருக்கும் பாகிஸ்தானில், தினசரி நூற்றுக்கணக்[illegible] அகதிகள் பட்டினியாலும், பசியாலும் செத்து மடிந்துகொண்டிருக்கும் சமயத்தில் இந்த கொண்டாட்டம் நடந்தேறியிருக்கிறது துன்புற்ற அந்த ஏழைகளுக்காக, போர்வைகள், வீடு, வைத்திய வசதி தொழிற்சாலைகள், அமைப்பதில் இந்த பணம் சிலவு செய்யப்பட்டிருந்தால் அந்த ஏழைகள் காயிதே ஆஜம் பல்லாண்டுவாழ பிரார்த்தனை செய்திருப்பார்கள். அது களிக்கூத்தைவிட அதிக பலன் தரத்தக்கதாயிருக்கும், அவ்விதம் நடக்கவில்லை.

(கரீம் பக்ஷ்) காராச்சி,

## மௌலானா மதனியின் அறிவுரை.

### பாகிஸ்தான் ஆங்கிலேயரின் தயாரிப்பு.

ஸஹாரன்பூர்,

மௌலானா மன்ஸூருந்நபி அவர்களின் தலைமையின் கீழ் ஜூம்மா மசூதியில் கூடிய மாபெரும் கூட்டத்தில் பேசும்போது "பாகிஸ்தான் ஆங்கிலேயரின் தயாரிப்பு" என்று மௌலானா ஹூஸேன் அஹமத் மதனி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்:— ஹிந்து முஸ்லிம்களிடையே விரோதத்தை வளர்ப்பதே அதன் நோக்கம். வகுப்புவாத அடிப்படையால் முஸ்லிம் லீகையும், ஹிந்துமஹாசபையையும் ஆங்கிலேயர்கள் தோற்றுவித்தார்கள். இந்த பிற்போக்கு ஸ்தாபனங்கள் இரண்டும் ஆங்கிலேயர் வகுத்துக் கொடுத்த திட்டங்களையே அனுஷ்டித்துவந்தன. பிரிவினையின் விளைவுகளால் லக்ஷக்கணக்கில் மக்கள் அழிந்தார்கள். பல லக்ஷம் மக்கள் வீடிழந்து இன்னும் தவிக்கின்றனர். நடந்தது நடந்தாய்விட்டது கஷ்ட நஷ்டங்களுக்குள்ளானவர்களுக்கு எல்லோரும் ஏகோபித்து உதவிசெய்ய வேண்டியது இன்றுள்ள நமது கடமையாகும்"

ஸஹாரன்பூர் முஸ்லிம்களைக்குறித்து :— "இன்றைய விரும்பத்தகாத கலவரங்களைப்பார்த்து நீங்கள் மனம் தளரவேண்டாம். துன்பங்களை ஆண்மையுடனும் உறுதியுடனும் சமாளித்து நிற்க வேண்டும். சீக்கிரம் நிலைமை திருந்திவிடும். இன்று மதத்திற்கு களங்கம் உண்டாக்கப்படுகிறது. ஹிந்துக்கள் உண்மை ஹிந்துக்களாகவோ, அல்லது முஸ்லிம்கள் உண்மை முஸ்லிம்களாகவோ இல்லை. தர்மத்தின் பெயரால் லக்ஷக்கணக்கான மக்களின் இரத்தம் சிந்தப்படுகிறது" முடிவாக ஸஹாரன்பூர் ஹிந்து, முஸ்லிம்களை அமைதியுடன் வாழும்படி கேட்டுக்கொண்டார்.

# இந்திய முஸல்மான்களும் ஐக்கிய சமுதாயமும்.

## இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அரிய விளக்கம்.

(1943-ம் வருஷ ராம்கார் காங்கிரஸ் தலைமை உரையில்)

நான் ஒரு முஸ்லிம். முஸ்லிமென்று உணரும் போது பெருமை அடைகிறேன். பதிமூன்று நூற்றாண்டுகளின் பெருமைபடத்தக்க இஸ்லாமிய சரித்திரம் எனக்கு பிதுர்ராஜ்ஜிதமாய் கிடைத்திருக்கிறது. அதிலிருந்து இம்மியளவும் இழக்க நான் தயாரில்லை. இஸ்லாமிய போதனை, கல்வி, சரித்திரம், கலாசாரம், நாகரீகமே என்னுடைய செல்வக் களஞ்சியமாகும். முஸ்லிம் என்ற முறையில் மத, கலாசாரத்தைப் பொருத்தவரை குறிப்பிடத்தக்கதொரு நிலை எனக்கு உண்டு. அதில் யாரும் தலையிடுவதை என்னால் சகிக்க முடியாது.

ஆயினும் இத்யாதி உணர்ச்சிகளுடன் இன்னொரு உணர்ச்சியும் நான் கொண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையின் பிரத்யக்ஷ உண்மைகளால் அது ஏற்பட்டிருக்கிறது. இஸ்லாம் அதை தடுக்கவுமில்லை. அவ்வழியில் இஸ்லாம் எனக்கு வழிகாட்டவே செய்கின்றது.

நான் ஒரு இந்தியன் என்று நினைக்கும் பொழுது பெருமைப்படுகிறேன். பிரிக்கமுடியாத இந்திய சமுதாய அமைப்பின் ஒரு அங்கமாகவே நான் இருக்கின்றேன். முக்யத்வம் வாய்ந்த அங்கமாகிய நான் இல்லாமல் சமுதாயப் பெருமையின் கட்டடம் அரை குறையாகவே இருந்துவிடும். அதை உருவாக்குவதில் புறக்கணித்து விடமுடியாததொரு உறுப்பு என்ற உரிமையை எவ்விதத்திலும் நான்விட்டுவிட முடியாது.

மனிதவர்க்கத்தின் பல்வேறு ஜாதியினர் பலதரப்பட்ட நாகரீகத்தினர் வெவ்வேறு மதத்தினர் அடங்கிய கோஷ்டிகளின் வாசஸ்தலமாக இந்தியா விளங்க வேண்டுமென இயற்கையே முடிவுசெய்திருந்தது சரித்திரமே உதயமாகாமல் இருந்த அக்காலத்திலேயே அந்தக் கோஷ்டிகளின் வருகையும் ஆரம்பமாயிற்று. ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. எல்லோரையும் வரவேற்று, பரந்த இந்தியா, தன்னுடைய ஆதரவுகவிந்தமடியில் தங்குவதற்கு இடமும் கொடுத்தது. அவ்வாறு வந்தகோஷ்டிகளிலெல்லாம் கடைசியாக முஸ்லிம்களின் கோஷ்டியும் வந்துசேர்ந்தது அதற்குமுன் வந்தவர்களின் வழியை பின்பற்றியே வந்து சேர்ந்த முஸ்லிம்கள் நிரந்தரமாய் இங்கு தங்கலாயினர். அதிலிருந்து இந்தியா உலகத்தின் இரண்டு வேறுபட்ட ஜாதியினர் நாகரீகத்தினரின் உறைவிடமாக விளங்கிற்று. ஆரம்பத்தில் கங்கை, யமுனையைப்போல் தனித்தனியாகவே இவ்விரு ஜாதியினரும் பிரிந்து போய்க்கொண்டிருந்தனர். ஆனால் மாற்றமுடியாத இயற்கை விதியை ஒட்டி காலப்போக்கில் இருவரும் ஒரு சங்கமத்தில் போய் கலக்கவேண்டியதாயிற்று. இவ்விருவரின் கலப்பு இந்திய சரித்திரத்தில் மகத்தான அத்தியாயமாகும். இந்த கட்டடத்திற்கு பிறகு இயற்கையின் மர்மக்கரங்கள் பழய இந்தியாவுக்கு பதில் புதிய இந்தியா ஒன்றை நிர்மாணிக்கும் வேலையை தொடங்கி விட்டன.

நம்முடன் செல்வங்களை நாமும் கொண்டுவந்திருந்தோம். இந்த நாடும் தன்னுடைய செல்வங்களுடன் திதழ்ந்து கொண்டிருந்தது நாம் கொண்டுவந்திருந்ததை அதற்கு கொடுத்தோம். அதுவும் தன்னுடைய பொக்கிஷக்கதவுகளை நமக்காக திறந்து விட்டது இஸ்லாமிய களஞ்சியத்திலே மதிப்புவாய்ந்த "சகோதரத்துவம், ஜனநாயகம்" நாம் கொடுத்தோம்.

சரித்திரத்தின் பேதினொரு நூற்றாண்டுகள் இவ்விதம் கழிந்திருக்கின்றன. இன்று ஹிந்து தர்மத்துக்கு இந்த நாட்டில் உள்ள அதே உரிமை இஸ்லாமுக்கும் உண்டு ஹிந்து தர்மம் பல ஆயிரம் வருஷங்களாக இத்தேசத்து மக்களின் தர்மமாக இருந்து வந்திருப்பினும் இன்று இந்தியர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதுடன் ஹிந்துக்கள் ஹிந்து தர்மத்தை அனுஷ்டிப்பதைப்போலவே நாமும் இந்தியர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதுடன் இஸ்லாமிய தர்மத்தை அனுஷ்டிப்பதும் சாத்தியமே இன்னும் விரிவான முறையில் கிருஸ்தவர்களின் உரிமையையும நான் ஒப்புக்கொள்கிறேன். இன்று கிருஸ்தவர்கள் தலை நிமிர்ந்து இந்தியர்களென்றும் இந்தியர்களின் மதங்களில் ஒன்றான கிருஸ்துவ மதத்தை அனுஷ்டிப்பவர்கள் என்றும் சொல்லிக் கொள்ளும் உரிமை அவர்களுக்கும் உண்டு.

பதினொரு நூற்றாண்டுகளின் கூட்டு சரித்திரம் இன்று நம் இந்திய வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய பாஷைகள், நாகரீகங்கள் இலக்கியங்கள், கவிதைகள், நோக்கங்கள், உடைகள், பழக்கவழக்கங்கள், முதலிய தினசரி வாழ்க்கையின் எந்த ஒரு அம்சமும் கூட இந்தக் கூட்டுவாழ்க்கை முத்திரை குத்தப்படாமல் இருக்கவில்லை. நம் பாஷைகள் வெவ்வேறாக இருந்தன. ஒரே பாஷையை பேச ஆரம்பித்தோம். நம்முடைய பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருந்தன. அவைகள் ஒன்றுசேர்ந்து புதிய அச்சில் வார்க்கப் பட்டுவிட்டன. நம்முடைய பழய உடை சரித்திரத்

தின் பழய சித்திரங்களில் பார்க்க முடிகின்றதேஒழிய நம் திரேகங்களின் மீது காணக் கிடைக்கவில்லை. கூட்டுவாழ்க்கையின் இந்த ஆஸ்தி நம்முடையஐக்கிய சமுதாயத்தின் பெரும் பொக்கிஷமாகும். அதை இழந்துவிட்டு நம் கூட்டு வாழ்க்கை ஆரம்பமாவதற்கு முன்பிருந்த அந்தக் காலத்திற்குத் திரும்ப நாம் விரும்பவும் இல்லை. ஆயிரம் வருஷங்களுக்கு முன் னிருந்த ஹிந்து நாகரீகத்தை இன்று திரும்பவும் கொண்டுவர யாராவது ஹிந்துக்கள் நினைத்தால் அது கனவாக முடியுமேயொழிய நடக்கப்போவதில்லை. அவ்விதமே ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஈரான் மத்திய ஆசியாவிலிருந்து முஸ்லிம்கள் கொண்டுவந்த பழய நாகரீகத்தையும் வாழ்க்கையையும் இன்று மீண்டும் உயிர்ப்பிக்க எண்ணினால் இவ்வித எண்ணத்தை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக விடமுடியுமோ விடுவது நன்மைபயக்கும், என்று முஸ்லிம்களுக்கும் யோசனை கூறுவேன். அது ஒரு மனோராஜ்யம், பிரத்தியக்ஷ உண்மை நிலத்தில் இம்மாதிரியான எண்ணங்கள் முளைக்க முடியாது. மதத்தில் சீர்திருத்தத்திற்கு இடமுண்டு என்ற நம்பிக்கை உள்ளவர்களில் நானும் ஒருவன் அதை மறுப்பது முன் போக்கையே மறுப்பதாகும்.

நம்முடைய ஆயிரம்வருஷத்திய கூட்டுவாழ்க்கை ஐக்கிய சமுதாயத்தின் புதிய அச்சு ஒன்றை தயாரித்திருக்கிறது இம்மாதிரியான அச்சுகள் மனிதர்களால் தயாரிக்கப்படுவதில்லை பல நூற்றுண்டுகளில் இயற்கையின் கைகளால் தானுகவே தயாரிக்கப்படுகின்றன, இந்திய சமுதாய அச்சு வார்த்து ஆய்விட்டது. விதியின் முத்திரையும் அதன்மீது குத்தப்பட்டு ஆயிற்று. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரிக்கமுடியாத சமுதாயமாக உருவாகிவிட்டோம். பிரிப்பதற்கான எந்த செயற்கை எண்ணங்களும் ஒன்றாக இருக்கும் நம்மை இரண்டாக பிரிக்கமுடியாது இயற்கையின் தீர்ப்பை ஏற்று நம் விதியை நிர்ணயிக்கும்வேலையில் முனையவேண்டும்.

இன்று நம் வெற்றி மூன்று விஷயங்களைப் பொருத்தே இருக்கிறது. ஒற்றுமை, கட்டுப்பாடு, மகாத்மா காந்தியிடம் நம்பிக்கை, அவர் காட்டிய வழி நம் கடந்த காலத்திற்குப் பெருமை அளித்திருக்கிறது. அதைப் பின்பற்றுவதன்மூலம் மஹத்தான எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும். நெருக்கடியான சோதனைகாலம் நம்மை எதிர்நோக்கி யுள்ளது. ஆவலுடன் உலகம் நம்மை நோக்கும் சந்தர்ப்பத்தை நாம் உலகத்துக்கு அளித்திருக்கிறேம். அதற்குத் தகுதியுள்ளவர்களாக நாம் விளங்குவோமாக.

## பெண்கள், குழந்தைகள், தாக்கப்படும் இடத்தை இடிகள்தான் பொசுக்கும்

(எல்லை காந்தி பாதுஷாகான்)

### சிறுபான்மைக்கு தீங்கிழைத்து தெய்வ தண்டனையிலிருந்து தப்பிவிட முடியாது.

#### மைனரிடியை காக்க உயிர்நீத்த செஞ்சட்டையினர்

ஜனவரி 25-ல் "அல்ஜமியத்" நிருபரிடம் சமீபத்தில் வந்து சேர்ந்த ஹிந்து, சீக்கிய அகதிகள் எல்லைப் புர நிலைமையை அடியில்கண்டவிதம் விளக்கி கூறினர்.

"உயிர், உடமைக்கு குண்டர்களால் அபாயம் ஏற்பட்டிருந்த அதே எல்லைப்புரத்தில் முஸ்லிம்களின் பெரும் அளவு சக்தி சிறுபான்மையினரை பாதுகாப்பதிலும் முனைந்திருந்தது எல்லை காந்தி பாதுஷா கானும், அவருடைய செஞ்சட்டை தொண்டர்களும் உதவி செய்யாமல் இருந்திருந்தால் சிறுபான்மையினர் வெளியேறவும் முடியாமல் போயிருக்கும். அச்சமயம் சிறுபான்மை பாதுகாப்பை தவிற அவர்களுக்கு வேறு வேலையே இருக்கவில்லை"

#### சாபம் நிச்சயம்

"செஞ்சட்டை தொண்டர்களின் கூட்டமொன்றில் பேசுகையில் "ஹிந்து, சீக்கியர்களை தாக்குவது பட்டாணிய கௌரவத்தையும், இஸ்லாமின் புனிதப் பெயரையுமே தாக்குவதாகும். இந்தியர்களாயினும், பாகிஸ்தானிகளாயினும், சிறுபான்மையினரை தாக்கியவர்களும், பரம்பரையாக அவர்கள் வாழ்ந்து வந்த இடத்தை விட்டு அவர்களை வெளியேற்றியவர்களும் அரசாங்க தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டாலும்கூட தெய்வ தண்டனையிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. கடவுள் அவர்களை சபிப்பார். பெண்கள், குழந்தைகள், தாக்கப்பட்ட பிரதேசம் ஒருநாளும் செழிப்பதற்கில்லை இடிகளால் அது பொசுங்கி விடும்" என்று எச்சரித்தார்.

#### உங்களைக் காக்க உயிர் அர்ப்பணிப்போம்.

"செஞ்சட்டை தொண்டர்கள் ஒவ்வொரு ஊரிலும் போய் சிறுபான்மையினரை கூட்டி "உங்களைக் காக்க உயிர்களை அர்ப்பணிப்போம், ஆனல் உங்களுக்கு துன்பம் ஏற்படுவதை சகிக்கமாட்டோம். தெய்வ சன்னிதானத்திலும் உங்கள் முன்னிலையிலும் நாம் சத்தியம் செய்கிறேம். நீங்கள் வீடுகளை விட்டுச் செல்லவேண்டாம்" என்று உற்சாகமூட்டி வந்தனர்.

### லீக் லீடர்களின் விஷமம்

"பீஹார், கிழக்கு பஞ்சாப், டில்லி, முதலிய இடங்களில் முஸ்லிம்கள் கொல்லப்படுவதாகவும், முஸ்லிம் பெண்மணிகள் கற்பழிக்கப்படுவதாகவும் பிரசாரம் செய்து லீக் லீடர்கள் கலகங்களை தூண்டினர்கள். திரு குர் ஆனின் கிழிந்த ஏடுகளையும், கொல்லப்பட்ட முஸ்லிம்களின் மண்டை ஓடுகளையும் பட்டாணியர்களுக்கு காட்டி ஆத்திரமூட்டுவார்கள். ஆயினும் பாதுஷாகான் உறுதி தளரவோ, நிலை தடுமாறவோ இல்லை. சிறுபான்மையினரின் பாதுகாப்பு தன்னுடைய மதக் கடமையாகவே அவர் மேற்கொண்டார். துஷ்பிரசாரத்திற்கெல்லாம் அவர் கொடுக்கும் பதில் ஒன்றுதான். "நிரபராதிகளை பழிக்குப்பழி வாங்குவது இஸ்லாமுக்கு முற்றிலும்முரண்பட்ட செய்கை." என்பதையே அவர் நமக்கு கற்றுக் கொடுத்தார்."

" இரவு பகல் நம் வீடுகளையும் கடைகளையும் அவர்கள் பாதுகாத்தனர். அவர்களுடைய தலைவர் எல்லை காந்தி பாதுஷாகான் பல மாதங்களாக இரவில் தூங்கவே இல்லை." "சிறுபான்மையோருக்கு வேண்டிய பண்டங்கள், சாமான்கள் அவர்களே கடைகளிலிருந்து வாங்கிவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்."

"குண்டர்களின் அட்டகாசம் அதிகரித்து நிலைமையில் நெருக்கடி ஏற்பட்ட சமயம் செஞ்சட்டையினர் தங்கள் பெண்கள் மூலம் ஹிந்து, சீக்கியர்களுக்கு உணவும், குழந்தைகளுக்கு பாலும் அனுப்பி வந்தார்கள். பல இடங்களில் புர்காக்களை போர்த்தி ஹிந்து, சீக்கியர்களை தங்கள் வீடுகளில் கொண்டுபோய் பத்திரப்படுத்தினர்கள். பட்டாணிய பெண்கள் ஹிந்து, சீக்கிய பெண்களை தங்கள் சகோதரிகளாகவே பாவித்து காப்பாற்றினர்கள்."

### பாதுஷாகானுக்கு எப்படி முகங் காட்டுவோம்

"வெளியேறவேண்டாம், அமைதியாகவும் திருப்தியுடனும் சிறுபான்மையினர் வாழ என்னால் வழி செய்ய முடியாமல் ஹிந்து, சீக்கிய சகோதரர்கள் வெளியேறிச் சென்றுவிட்டார்களே என்று எண்ணி எண்ணி பாதுஷாகான் மன வேதனைப் படுவார்" என்று அவர்கள் நம்மை வேண்டிக்கொண்டனர்"

" ஒரு செஞ்சட்டைத் தொண்டர் "நீங்கள் வெளியேறுவதால் நாங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டி இருக்கிறது. பாதுஷாகானுக்கு நாம் எப்படி முகங் காட்டுவோம்" என்று கதறி அழுதார்"

"எல்லை காந்தி பாதுஷாகான் இட்டபணி நிறைவேற்றுவதில் ஏராளமான செஞ்சட்டை தொண்டர்கள் குண்டர்களால் உயிர் நீத்தனர்."

ஹரிசிங்கு என்ற சீக்கிய அகதி ஒருவர் கூறியதாவது:—

### வீர முஸ்லிம்

"என்னுடைய தெருவில் என் நண்பரான செஞ்சட்டை தொண்டர் தாவூத்கான் இருந்து வந்தார். ஒரு நாள் சில குண்டர்கள் என் வீட்டை தாக்க வந்தனர். நான் குழந்தை குட்டிகளுடன் தாவூத்கான் வீட்டில் அடைக்கலம் புகுந்தேன் என் ஆஸ்தி முழுவதும் என் வீட்டில் இருந்தது. தாவூத்கானுடைய மகன் என் வீட்டுக்கு காவல் புரிந்துகொண்டிருந்தான். தாவூத்கானும் அவருடைய மகன் முராத்கானும் துப்பாக்கியைத் தாங்கி எங்களைக் காக்க வீட்டின் முன்னால் உலாவிக்கொண்டிருந்தனர். அதே சமயம் என் சொத்தைக் காக்க தன்னந்தனியே குண்டர்களை எதிர்த்து போராடிக்கொண்டிருந்த மகன் அடிபட்டு உயிர் விடும் தருவாயில் இருப்பதாக தாவூத்கானிடம் பலர் வந்து அறிவித்தனர். ஆயினும் அந்த வீர முஸ்லிம் நம்மை விட்டுப்போக சம்மதிக்கவில்லை. அந்த புனித போராட்டத்தில் தாவூத்கான் தன்னுடைய மகனை இழந்தார்"

"லாஹூர் வரையில் தாவூத்கான் எங்களுக்கு துணையாக வந்தார். நம்மை விட்டுப் பிரியும்போது அவருடைய கண்களிலிருந்து புனிதக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று."

"மஹாத்மா காந்தியின் கொள்கையை ஆதரிப்பவர்களாகிய நாம் எல்லை காந்தியையும் அவருடைய தொண்டர்களையும் மறக்கமாட்டோம். அவர்கள் எங்கள் உயிர், உடல் மானம், எல்லாவற்றையும் காப்பாற்றியிருக்கிறார்கள். அவர்களின் சீரிய கொள்கையையும் விடமாட்டோம் என்று உறுதி அளித்து தாவூத்கானை அனுப்பினேன்."

---

## வாசகர்களுக்கு

ஏற்பாடுகள் முடிவடையாமல் இருக்கையிலேயே "ஆஸாத்" அவசரத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது. அடுத்து வரும் இதழ்களில் அன்பர்கள் பல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

மானேஜர்.

# லக்னோ மகாநாட்டிற்கு பிறகு முஸ்லிம்களின் மனமாறுதல்

## டில்லி முஸ்லிம்கள் பீதியுற வேண்டாம்.

### மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அறிவுரை.

டில்லி, 12 ஜன 1948.

டில்லி ஜாமியா மசூதி எதிரிலுள்ள உர்தூ பார்க்கில் மௌலானா அஹ்மத்சயீத் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்திய கல்விமந்திரி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத் நீண்ட, அரிய பிரசங்கம் செய்தார் கூட்டத்திற்கு ஏராளமான ஹிந்து, சீக்கியர்கள் வந்திருந்தனர்.

தலைவர் தனது முன்னுரையில், இந்தியமாகாணங்களில் இனி கூட்டப்படவிருக்கும் மஹாநாடுகளில் லக்னோ மஹாநாடும் ஒன்று என்பதை விளக்கினர். வகுப்புக்கலவரங்கள் போகிறபோக்கில் பிரிட்டிஷார் வழங்கிவிட்டுப்போன பரிசு என்றும் வெள்ளையர் வந்ததும், வெளியேறியதும் இந்தியாவுக்கு தொல்லையாகவே முடிந்ததென்றும் எடுத்துக்காட்டினர். முஸ்லிம்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு சிலர் பாகிஸ்தானுக்கு சென்றுவிட்டனர். சிலருக்கு பாகிஸ்தானில் இடம் கிடைக்காமல் போனதுடன் தங்கள் வீடுகளிலும கூட அவர்கள் நிம்மதியாக வாழ முடியாமல் போய் இருக்கிறதென்றும் முஸ்லிம்கள் உண்மையான பிரஜைகளாக இருக்கவேண்டுமென்றும் லக்னோ மஹாநாட்டின் மூலம் இந்திய முஸல்மான்களுக்கு மௌலானா ஆஸாத் சரியான வழிகாட்டியுள்ளாரென்றும் அறுவுருத்தினர். பிறகு மௌலானா ஆஸாத் பேசியதாவது:—

"லக்னோ மஹாநாட்டுக்குப்புறகு சில விஷயங்களை உங்களுக்கு விளக்கவேண்டுமெனஎண்ணினேன் அலுவல்களின் மிகுதியால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை டில்லி காங்கிரஸ் கமிட்டியார் வேண்டுகோளின் பேரில் இன்று நேரத்தை ஒதுக்கினேன். இன்று நம முன்னுள்ள டில்லி நிலைமை பற்றி முதலில் சில வார்த்தைகள் பேசுவேன். இரண்டு தரப்பையும் கவனிக்காதவரையில் சரியான முடிவை நாம் காண முடியாது"

"பாஞ்சால கலவரங்கள் ஆரம்பித்தன. எதற்காக எப்படி ஆரம்பித்தன என்று உலகத்திற்கு தெரியும். நாம் ஆரம்பிக்கவில்லை என்பது உண்மை. துன்பங்கள் அடைந்து தங்கள் தேசத்திலேயே பரதேசிகளாய்விட்ட லட்சக்கணக்கான மக்கள் வந்து டில்லியில் குவிய ஆரம்பித்தனர். இவர்கள் நிரபராதிகள். டில்லியிலுள்ள பஹாட்கஞ்ஜ், ஸப்ஜிமண்டி, கரோல், பாக், முதலிய முஸ்லிம் பிரதேசங்களில் இன்று முஸ்லிம்கள் இல்லை, வந்தவர்கள் அங்கு குடியேறி இருக்கின்றனர். மேலும் பஞ்சாப் மட்டுமின்றி எல்லைப்புரம், சிந்து, பலூசிஸ்தானத்திலிருந்தும் வெளியேற்றிக்கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டியது சர்க்கார் பொருப்பு தினசரி இருபது லட்ச ரூபாய் செலவு செய்தும் கஷ்டம் தீர முடியவில்லை. மந்திரத்தினல் இந்தப்பிரச்னையை தீர்த்துவிட முடியாது"

"இந்திய சர்க்கார் தீர்க்காலோசனைக்குப்பிறகு டில்லியில் ஜனங்கள் வசிக்கும் பிரதேசங்களை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தாலன்றி பிரச்னை தீர முடியாது என்று முடிவுசெய்தது. இதனல் டில்லியில் தற்சமயம் இருப்பவர்களும் இருந்து வருவதும சாத்தியமாகும் பாக்கியுள்ளவர்களுக்காக சீக்கிரமாக ஏற்பாடு செய்யவும் முடியும். இன்னிலையில் "ஹபஷ் கான்கேட்" டில் காலியாக இருக்கும் வீடுகள் ஏன் கொடுக்கப்படக்கூடாது. என்று கேட்கப்படுகிறது.

நீங்கள் துன்பமடைந்து வந்து சேர்ந்தவர்கள் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். உங்களை அங்கு குடியேற்றுவது உகந்ததல்ல. நீங்கள் மேற்கு பஞ்சாபிலிருந்து வெளியேறியிருக்கின்றீர்கள். உங்களுக்கு கிழக்கு பஞ்சாபில் பூரணஉரிமையும் உண்டு. முதல்தரமான வசதியும் அங்கு செய்துகொடுக்க முடியும். இங்கு இருப்பவர்களுக்கு சர்க்காரை நம்பும்படி யோசனை கூறுகிறேன். சர்க்கார் தன் கட்டுப்பாட்டை விட்டுவிட முடியாது. வெளியார்களுக்கு வசதி, டில்லி வாசிகளுக்குப் பாதுகாப்பு, இவ்விரண்டும் சர்க்கார் மேற்கொண்டிருக்கும் பொருப்புகளாகும்."

"டில்லியில் இருப்பவர்கள் பீதி அடையாமல் இருக்கவேண்டும் சிறு விஷயங்களில் அவர்கள் பீதி அடைவதால் எல்லோருக்குமே நஷ்டம் ஏற்படக்கூடும். உறுதியுடன் இருக்கவேண்டும். சர்க்கார் அஜாக்கிறதையாக இல்லை. ஒவ்வொரு நிமிஷமும் நிலைமையை சர்க்கார் கவனித்து வருகிறது.

"வெளியார்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென ஆர்வம் கொண்டிருக்கும் டில்லி வாசிகள் ஏராளமானபேர் என்னிடம் வருகின்றனர் அதில் பெரும்பான்மையோர் முஸ்லிம்களாய் இருப்

(13-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லி[illegible]ள் சேர்ந்து காங்கிரஸை பலப்படுத்தவேண்டும்.

லக்னோ,

**மகாத்மாவின் கோரிக்கையை பூர்த்திசெய்தார். பண்டித பந்தின் கண்ணியமான அழைப்பு.**

இந்தியாவிலுள்ள சகல வகுப்பாருக்கும் பொதுவானதொரு அரசியல் கொள்கையே காங்கிரஸின் லட்சியம். ஜாதி மத பாகுபாடின்றி எல்லோருக்கும் அரசியலில் முன்னேற அதில் சந்தர்ப்பம் உண்டு. காங்கிரஸ் எப்பொழுதுமே அனுஷ்டித்து வந்திருக்கும் கொள்கை இதுதான் ஆயினும் ஒருசிலர் அதை ஒப்புக்கொள்ளாமல் இரு சமுதாயக்கொள்கையை புகுத்தினார்கள்.'' இவ்விதம் ஐக்கிய மாகாண சட்ட சபை இடைத்தேர்தலில் லக்னோ நகர முஸ்லிம் தொகுதிக்கு பேட்சகராய் காங்கிரஸ் நிறுத்தியிருக்கும் மௌல்வி முஸப்பர் ஹுஸைனை ஆதரித்து தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்த மாகாண பிரதமர் பண்டித பந்த் பேசினார்.

**அவர் மேலும் பேசியதாவது:—**

"தனித்தொகுதி, முஸ்லிம்களுக்கு தனி ஸ்தானங்கள், இரு சமுதாயக் கொள்கையினருக்கு திருப்தி அளிக்கவில்லை. தனி தேசத்தையே அவர்கள் கோரினர். பிரிவினை நல்லதல்லவென்று நாம் நம்பினோம். ஆனால் நாட்டின் சூழ்நிலை விஷமயமாக்கப்பட்டது. அதிலிருந்து தப்புவதற்காகவே நாம் பிரிவினைக்கு இணங்கினோம்." மேலும் பேசுகையில்

"வகுப்பு வாதத்திற்கு அரசியலில் இடமளிக்கப்பட்டதால் சிறுபான்மையோர்நிலைமை சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. பிரிவினையால் ஏற்பட்டிருப்பதும் இதுதான். பாகிஸ்தானிலுள்ள ஹிந்து சிறுபான்மையோரும், இந்தியாவிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையோரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எதிர்கால அரசியலில் வகுப்புவாதத்திற்கு இடமளித்தால் சிறுபான்மையோரின் கதி என்னவாகயிருக்கும் என்று இப்பொழுது தெளிவாகிவிட்டது சிறுபான்மையோர் திருப்தியுடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே காங்கிரஸின் ஆசை. தனித்து நிற்பதன் நாசகரமான விளைவுகளை நீங்களே கண்டுகொண்டீர்கள். எனவே இனி ஒற்றுமையின் அழைப்பை அலட்சியம் செய்துவிட சந்தர்ப்பம் இல்லை." மேலும் அவர்

"காங்கிரஸ் இந்தியாவில் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவே விரும்புகிறது. இவ்வித ஆட்சி அமைக்கப்படவேண்டுமென்பது முஸல்மான்களின் ஆசையாக இருந்தால் அவர்கள் காங்கிரஸ் கொள்கையை ஆதரிக்கவேண்டியதவசியம். அப்படிக்கின்றி தங்கள் பழைய வகுப்புவாத போக்கையே முஸ்லிம்கள் அனுஷ்டித்தால் கலப்பற்ற ஒரு ஹிந்து ராஜ்யம் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போகலாம்"

## ஓடி வந்தவர்களுக்கு பாகிஸ்தானில் இடமில்லை.!

**உங்கள் வீடுகளுக்கே திரும்பிச் செல்லுங்கள் காயிதே ஆஜம் உத்திரவு!**

டில்லி, ஐக்கிய மாகாணம் முதலிய இடங்களிலிருந்து கஷ்டப்பட்டு பாகிஸ்தான் வந்துசேர்ந்த முஸ்லிம் அகதிகளின் தூதுகோஷ்டி ஒன்று காயிதே ஆஜமைப் பேட்டிகண்டதாக கராச்சியிலிருந்து வந்திருக்கும் செய்திகளில் அறிவிக்கப்படுகிறது.

ஒன்றரை மாதம் அரும்பாடுபட்டு பெரும் முயற்சிகளுக்கு பிறகு கடைசியாக காயிதே ஆஜம் சில நிமிஷங்கள் பேட்டியளிக்க சம்மதித்தார்.

பாகிஸ்தான் முஸ்லிம்களிடையே நிலவி வரும் மாகாணவாரி வேற்றுமை, அதிகாரிகளின் லஞ்ச ஊழல், சர்க்காரின் அசட்டுத்தனம் முதலிய விஷயங்களையும் பொதுவாக பஞ்சாபியரல்லாதாரும், குறிப்பாக டில்லி ஐக்கிய மாகாண முஸ்லிம் அகதிகளும் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றியும், தூதுகோஷ்டி எடுத்துச்சொல்லி தங்களுக்கு பரிகாரம் செய்யும்படி காயிதே ஆஜமிடம் முறையிட்டது.

"வீணாக்குவதற்கு என்னிடத்தில் அதிக நேரமில்லை. கஷ்டங்களை குறித்து பிரமாதமான அளவு உணர்வுஉங்களுக்கு இருக்கும்போது நீங்கள்எதற்காக இங்கு வந்தீர்கள்? ஜனப்பரிவர்த்தனையை நான் விரும்புவதில்லை." என்று மிஸ்டர் ஜின்னா பதிலளித்தார்.

பாகிஸ்தான் ஏற்படுவதற்கு நாம்பெரிய அளவில் தியாகம் செய்திருக்கின்றோம் என்று தூதுகோஷ்டி எடுத்துச்சொன்னதற்கு "அதற்கு பிரதிப்பிரயோஜனமாக நீங்கள் இங்கு வந்து பாகிஸ்தானையும் அழித்துவிட வேண்டுமென்பது அர்த்தமல்ல" என்று காயிதே ஆஜம் பதிலளித்தார். முடிவாக அவரவர்கள் வீடுகளுக்குத் திரும்பி செல்லும்படியும், இந்தியாவில் அவர்கள் அமைதியாக வாழ சாத்தியமான சகல முயற்சிகளும் பாகிஸ்தான் செய்யும் என்றும் காயிதே ஆஜம் யோசனை கூறினார்.

---

பிற்போக்காளர்களையும், சர்க்காரை பலஹீனப்படுத்த முயற்சிப்பவர்களையும், கண்டித்து அவர் சொன்னதாவது:—"பிரிவினைக்குப் பிறகு தங்களை இந்தியர்கள் என்று நினைப்பவர்களும் சமுதாய ஐக்கியத்தை ஆதரிப்பவர்கள் மட்டுமே இங்கு இருக்க முடியும். வெளியாரின் வழிகாட்டுதலை எதிர்நோக்கி நிற்பவர்கள் இனி எவ்விதத்திலும் இங்கு இருந்து வருவது சாத்தியமே இல்லை"

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பதைப்பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன். சாத்தியமான சகல வழிகளிலும் சர்க்கார் தீவிரமாய் முயற்சித்து வருவதாக அவர்களிடம் உறுதி கூறினேன்."

**முஸ்லிம்கள் பீதி அடையவேண்டியதில்லை-**

"டில்லி முஸல்மான்கள் இம்மியும் பீதி அடைய வேண்டிய அவசியமில்லை பூரண பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வெளியார்களுக்கு மீண்டும் உறுதி கூறுகிறேன். சர்க்கார் உங்களுக்காக பெரிய அளவுக்கு முயற்சித்து வருகிறது. பெரும் அளவு செய்துமுடித்தும் இருக்கிறது. எத்தனையோ இன்னல்களிருந்தும் முயற்சிகள் துரிதமாய் நடக்கின்றன."

**லக்னோ மஹாநாடு.**

லக்னோ மஹாநாட்டைக் குறித்து மௌலானா ஆஸாத் மேலும் பேசியதாவது:— "சில விஷயங்களின் முக்கியத்துவம் காலப்போக்கிலேதான் விளங்க முடியும் ஆயினும் லக்னோ மஹாநாடு இந்திய முஸல்மான்கள் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் ஒன்றைத் தொடங்கி விட்டது என்பதில் சந்தேகமில்லை. முஸ்லீம்களுக்கு சரியான வழிகாட்ட கடந்த பத்து வருஷங்களாக சூழ்நிலை ஏற்றதாய் இருக்கவில்லை. மதத்தின்பெயரால் உணர்ச்சிகள் தூண்டப்பட்டன கலக ஆபத்தமான இரண்டு சமுதாயக் கொள்கை புகுத்தப்பட்டது. சரித்திரம், வாழ்க்கை ரீதியில் இது முற்றிலும் தவரான வாதமாகும். ஜாதி, மத அடிப்படையில் சந்தேகமின்றி நாம் வேறுபட்டிருப்பினும், சமுதாய பொருளாதார பந்தங்களால் நாம் பிணைக்கப்பட்டிருக்கிறோம் ஒரே வாழ்க்கைப் படகில் ஏறியுள்ள நாம் கரைசேர்ந்தால் அனைவரும் சேருவோம். மூழ்கினால் அனைவருமே மூழ்குவோம்"

"இன்று யூதர்கள் கோருவதைப்போல் தங்களுக்கு தனிநாடு வேண்டும் என்றுகோரினர்கள். அதிருப்தி, அவநம்பிக்கையை வளர்த்து தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக்கொண்டு முஸ்லிம்களை தவருனவழியில் இழுத்துச்சென்றனர். விமோசனத்திற்கு அது தான் வழி என்றும் முஸ்லிம்கள் நம்பினரே ஒழிய அது எந்த வழி என்றும் பாகிஸ்தான் எப்படி இருககும் என்றும் உண்மையாகவே அவர்களுக்குத் தெரியாது."

"லக்னோ மஹாநாட்டுக்குப் பிறகு தவருன வழியில் இழுத்துச்செல்லப்பட்ட முஸ்லிம்கள் விழிப்படைந்துவிட்டனர். இனி அவர்களை மயக்க முடியாது என்பது நிச்சயமாய்விட்டது."

"லக்னோ மஹாநாடு முஸ்லிம்களின் [illegible]க்கங்களையும், போக்கையும் மாற்றிவிட்டது. அவர்கள் மன மாறுதல் அடைந்துவருகின்றனர்"

"நான் மு[illegible]லிம் பொதுமக்களை குறைகூறவில்லை. உண்மையில் அவர்கள் நிதானமிழந்திருந்தனர். ஆகஸ்ட் 15-க்குப் பிறகு இந்தியாவில் இருந்துவிட்ட பொருப்புவாய்ந்த லீக் பிரமுகர்களும் இனி தங்கள் போக்கு உகந்ததல்ல என்று உணர்ந்துவிட்டனர். ஆயினும ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருப்பவர்கள் சிலர் இருக்கின்றனர் என்பது எனக்குத்தெரியும். அவர்களைப் பற்றிய பிரச்னையல்ல முஸ்லிம் பொது மக்கள் சம்மந்தப்பட்ட வரையிலேயே நான் பேசிகிறேன் வாழ்நாட்களை மக்கள் நாடி பரீட்சிப்பதிலேயே கழித்திருக்கிறேன். இதுவரையில் முஸ்லிம்களின் போக்கு எதுவாக இருந்தது என்று எனக்குத் தெரியும். அந்தப்போக்கு தவருனது என்று அவர்களே உணர்ந்துவிட்டதை லக்னோமஹாநாட்டில் நான் பார்த்தேன். ஏறக்குறைய லட்சம் மக்கள் அங்கு கூடினர். ஆயிரக்கணக்கில் பிரதிநிதிகள் வந்தனர் உண்மையில் லக்னோ மஹாநாடு முஸ்லிம்களை தட்டி எழுப்பியிருக்கிறது ஏற்பட்டிருக்கும் மனமாறுதல் சமுதாயத்துறையில் வரவேற்கத் தகுந்ததாகும். அதை நாம் மேலும் பலப்படுத்த வேண்டும்"

"வகுப்புவாதம் கடந்த பத்து வருஷங்களாக வளர்க்கப்பட்டிருக்கிறது. சமுதாயப்பற்றை வளர்க்க நாம் குறைந்தது ஒரு வருஷமாகிலும் பாடுபடவேண்டும். அந்த வேலையை செய்ய 'யூனியன் அண்ட் பிராக்ரஸிங் கமிட்டி" என்னும் பெயருடன் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது இந்தக் கமிட்டி சமுதாயப்பற்று வளர்க்கப் பாடுபடும் இந்தியாவில் வசிப்பவர்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தினர். அதற்கு இந்திய சமுதாயம் என்று பெயர். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் முதலிய யாவரும் இந்தியர்களே எல்லோரின் உரிமைகளும் ஒரே இந்திய தராசில் தூக்கப்படும். தனி சமுதாயம் என்றநோக்கத்துடன் உறிமைகளைப்பற்றி பேசவேண்டாம். இனி திறமைதான் பிரதானம் என்னும் பனப்பான்மையை இக்கமிட்டி வளர்க்கப் பாடுபடும்"

"தங்களை இந்தியர்கள் என்று நினைப்பவர்களுக்கு மட்டுமே இனி இங்கு இடமுண்டு. எந்தக்கட்சியும் வகுப்புவாதம் வேண்டும் என்று சொல்லுவதாகத் தெரியவில்லை நாட்டின் சூழ்நிலையை செப்பனிட வேண்டும். அதற்கு உழைப்பு, நிதி இரண்டும் தேவை உர்து, ஆங்கிலம், இரண்டுபாஷைகளிலும் இரண்டு பத்திரிகை ஆரம்பிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறது பிரதி வாரமும் இப்பத்திரிகைகள் உங்களுக்கு விஷயங்களை தெரிவிக்க முடியும்"

**[illegible] லீக் ஒதுங்கியது சரியல்ல.**

மஹாநாட்டில் லீகர்கள் சிலர் கலந்துகொள்ளாமல் போனதைக்குறித்து மேலும் பேசியதாவது:— “லக்னோவில் லீக் பிரமுகர்கள் என்னை சந்தித்தனர். முஸ்லிம்களின் குறைகளையும் மஹாநாட்டில் எடுத்துச் சொல்லுவதாக இருந்தால் தாங்களும் கலந்துகொள்வதாக அவர்கள் சொன்னார்கள். குறைகள் எடுத்துச் சொல்ல வழிகள் வேறு இருக்கின்றன. கூட்டங்களை கூட்டி அதன் மூலமாகவும், தூது கோஷ்டிகள் சர்க்காரை சந்திப்பதன் மூலமாகவும் நம் குறைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொல்லலாம். இந்த மஹாநாடு ஒரே லட்சியத்துக்காக கூட்டப்பட்டிருக்கிறது. சம்மந்தமில்லாத வேறு எந்தப்பிரச்னையும் இதில் எடுத்துக்கொள்ள முடியாது. என்றும் டில்லி கன்வென்ஷன் முடிவைக் குறித்து ஒரு முடிவுக்கு வரவே இந்த மஹாநாடு கூட்டப்படுகிறது, என்றும் சொன்னேன். அவர்கள் கலந்துகொள்ளவில்லை குறைகளை எடுத்துச் சொல்லவும் கான்பரென்ஸில் இடமில்லை என்று துஷ்பிரசாரம் செய்யப்பட்டது. அந்த பிரசாரத்தால் எவ்விதமாறுதலும் ஏற்படவில்லை என்று நம்புகிறேன்”

முடிவில் மீண்டும் ஒருமுறை கவலைக்கு எவ்வித காரணமும் இல்லையென்றும், வெளியார்களுக்கு வசதி செய்யவும், டில்லி வாசிகளை பாதுகாக்கவும் சர்க்கார் மேற்கொண்டிருக்கும் பொறுப்புகள் இரண்டையும் பூரண உறுதியுடன் நிறைவேற்றும் என்றும் எவ்விதத்திலும் தன் உறுதியை சர்க்கார் தளர விட்டுவிட முடியாது என்றும் உறுதியளித்தார்,

கடைசியில் ஜமியாவைச் சேர்ந்த மௌலானா ஹபீபுர்ரஹ்மான் கீழ்வருமாறு பேசினார்.—

“முப்பதுவருஷ தியாகங்களுக்குப்பிறகு பிரதேச காங்கிரஸ் காரர்கள் “இனி உங்கள் உயிருக்குப் பாதுகாப்பில்லை.” என்று பகிரங்கமாய் அறிவித்துவிட்டார்கள். உங்களுக்கும் ஆபத்தா! என்று பல முஸ்லிம்கள் வந்து என்னை கேட்டனர். நம்முடைய பாவ எண்ணங்கள் தான் என்று நான் பதிலளித்துவருகிறேன். அடிபட்டோம். கொள்ளை அடிக்கப்பட்டோம், அழிந்தோம் என்றால் அதற்கு நம் நெஞ்சங்களில் உள்ள பாவங்களே காரணம்”

“1857-க்குப் பிறகு நாம் ஒன்றாக இருந்தோம் என்பது தவறு பள்ளிக்கூடங்கள் முதல் சினிமாவரையில் வகுப்புவாதம் வளர்க்கப்பட்டுவந்திருக்கிறது. ஹிந்து, முஸ்லிம்கள் பிரித்தே வைக்கப்பட்டனர். காங்கிரஸும், உலாமாக்களும் ஒன்றுபடுத்த அரும்பாடுபட்டு வந்தனர். ஆனாலும் சுயநலக்காரர்கள் பல கட்சிகளை ஏற்படுத்தினார்கள். முடிவில் வெள்ளையன் வெளியேறினான். சுயநலக்காரர்களின் கட்சிகள் ஒன்றோடொன்று மோதின, தேசீய, சமுதாய வாதிகளும் நிரபராதிகளும் கூட பாதிக்கப்படாமல் இருக்கவில்லை. பாஞ்சால கலவரங்களில் தங்கள் உயிருக்கு வரும் ஆபத்தையும் லட்சியம் செய்யாமல் பிறரைக் காப்பாற்றிய ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், ஏராளமாக இருக்கின்றனர்.

இருப்பினும் கண்யமுள்ளவர்கள் சக்தியற்றுப் போனதுதான் பஞ்சாபகலவரங்களுக்கு காரணம்”

“பிரிட்டிஷ் சனியன்களை தோள்கள்மீது தாங்கி பிற நாட்டினர் மீது அக்கிரமம் செய்தவர்களுக்கே இன்று அக்கிரமம் செய்யப்பட்டிருக்கிறது. இது இயற்கை வாங்கிய பழிக்குப்பழியாகும்.”

“1942-ல் பிரிட்டிஷாருடன் சேர்ந்து தேசத்துக்கு துரோகம் செய்தவர்கள் சுகமாகவே வாழுகின்றனர். அவர்கள் அடிக்கப்படவில்லை. கொள்ளையிடப்படவும் இல்லை”

“எகிப்து ஈரான் முதலிய நாடுகளில் ஜனநாயக கட்சிகளை தகர்த்துவிட்டதைப்போல் இந்தியாவிலும் காங்கிரஸை பலஹீனப்படுத்த பிரிட்டிஷார் முயற்சி செய்கின்றனர். அப்பொழுதுதான் சாம்ராஜ்யமானக் கெட்ட போக்குக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க முடியும்”

“நாட்டின் சுதந்திரத்திற்காக ஹிந்து, சீக்கியர்கள், செய்த தியாகங்களையும் அனுபவித்த துன்பங்களையும் வீணாக்காமல் இருக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சுதந்திர விரோதிகளின் கையிலிருந்து நாம் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை, ஒரு முஸ்லிமைக்கூட தாக்குவதோ, வெளியேற்றுவதோ சுதந்திரத்திற்கு இழைக்கப்படும் தீங்காகும்”

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

லிருந்து வந்திருக்கும் அகதிகளும் சும்மா இருக்க முடியாது. இங்கிருக்கக் கூடிய வகுப்பு வாதிகளும் அவர்களைத் தூண்டிவிடும் வேலையில் முனைந்திருக்கிறார்கள். மிஸ்டர் ஜின்னாவோ மேலும், மேலும் கலகங்கள் நடந்துகொண்டேயிருக்க, அவ்வப்போது தூபம் போட்டுக்கொண்டே இருப்பார். இந்தியாவில் பல பாகங்களில் குடியேற்றப்படும் அகதிகளை ஆங்காங்குள்ள வகுப்புவாதிகள் ஆயுதமாக உபயோகித்துக்கொள்ளவும் தயங்கமாட்டார்கள். அகதிகள் குடியேறிய இடங்களிலெல்லாம் கலவரங்கள் நடந்து வருவதையும் இன்று நாம் பார்க்கிறோம்.

இந்தியாவில் அவர்கள் தங்களுக்கு இயற்கையாகவே உரிமை உண்டென்று எண்ணுகின்றனர்.

கடைகளையும், வீடுகளையும் கொள்ளை கொடுத்துவிட்டு ஓடிவந்திருக்கும் அவர்களுக்கு, இந்திய முஸ்லிம்கள், கடைகளில் உட்கார்ந்துகொண்டு வியாபாரம் செய்வதையும், பெரிய வீடுகளில் சுகமாக வாழ்ந்து வருவதையும் பார்க்கும்போது கண்கள் சிவக்கின்றன. முஸ்லிம்களின் வீடுகளையும், கடைகளையும் ஆக்கிரமித்துக்கொள்ள பிரதேச ஹிந்துக்களுடன் சேர்ந்து கலவரம் செய்கின்றனர். கலவரத்தினால் அவர்களுக்கு லாபமே. கடைகளையும், வீடுகளையும் அப்பொழுது தான் ஆக்கிரமித்துக்கொள்ள முடியும். கொஞ்சமாவது பொருள் உள்ளவர்கள் கலவரத்துக்குப் பயப்படக் காரணம் உண்டு. இருந்ததெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு வெறுங்கையுடன் இருப்பவர்கள் கலவரங்களுக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. இம்மாதிரி கண்ணெதிரே தங்கள் குழந்தை குட்டிகள் பெண்கள், சகோதரிகள் கொல்லப்பட்டதைப் பார்த்தும் வீடுவாசல்களை இழந்தும் ஓடிவந்திருக்கும் 50 அல்லது 60 லட்சம் அகதிகள் இந்தியா எங்கும் அலைந்து கொண்டிருப்பர். இதனால் இந்தியாவின் அமைதிக்கு எந்த நிமிஷமும் பங்கம் ஏற்பட முடியும்.

பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய ஹிந்து, சீக்கியர்கள் உள்ளபடியே நிரபராதிகளாவர். அவர்கள் விரும்பாத ஒன்றுக்காக இன்று தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பிரிவினையை அவர்கள் எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கின்றனர். இந்திய முஸல்மான்கள் நிலைகெட்டுத் திரிந்துகொண்டிருப்பதை ஓரளவு நியாயம் என்றுகூட சொல்ல முடியும். அவர்கள் பாகிஸ்தானை விரும்பினார்கள். "லேகேஹே ரஹேஹங்கே பாகிஸ்தான்" என்று கோஷித்தார்கள். முஸ்லிம் லீகுக்கு ஓட்டுச்செய்தார்கள். இந்தப் புண்ணியவான்கள் இன்று துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்றால் அது அவர்களுடைய செய்கைக்குச் சரியான தண்டனை என்று நினைக்க முடியும். ஆனால் பாகிஸ்தான் ஹிந்து, சீக்கியர்களோ பாவம்! நிரபராதிகள். எனவே அவர்களுடைய கோபம் முற்றிலும் நியாயமானதாகும்.

### வகுப்புவாத எதிரொலி,

பிரிவினைக்குப் பிறகு இந்தியாவிலுள்ள அநேக ஹிந்துக்களின் நோக்கங்களில் ஏற்பட்டிருக்கும் மாறுதலைப் பார்த்து, சிந்தனை சக்தியுள்ளவர்கள் கவலைப்படாமல் இருக்கமுடியாது. பத்து வருஷங்களாக லீக் செய்துவந்த பிரசாரமும், மிஸ்டர் ஜின்னா அடைந்த வெற்றியும் பெரும் அளவுக்கு அவர்களுடைய நோக்கங்களிலும் மாறுதல் உண்டாக்கிவிட்டது. பாஸிஸ முறைகளில் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். பொது மக்களின் மத உணர்ச்சியைத்தூண்டி தங்களுடைய காரியத்தை சாதித்துக்கொள்ளமுற்பட்டிருக்கின்றனர். பொதுவாக முஸ்லிம் லீக் அனுசரித்த போக்கையே அனுசரிக்கின்றனர். பாமர மக்களை தங்களுடன் சேர்த்துக்கொள்ள தீவிரமாக வேலையும் நடந்துவருகிறது.

ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம், லீகைப்போலவே ஒரு பாஸிஸ்ட் ஸ்தாபனமாகும். இதுவரை எழுபத்தைந்து லக்ஷம் மெம்பர் சேர்ந்திருக்கின்றனர். மெம்பர்களின் எண்ணிக்கை ஒரு கோடிக்கு எட்டிய பிறகு இந்திய நிர்வாகத்தை பலவந்தமாக கைப்பற்றுவது அவர்களுடைய திட்டம். சட்ட பூர்வமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பத்திரிகை பிரசாரத்தை அதிகமாக அவர்கள் விரும்புவதில்லை. இரண்டு கோடி ரூபாய் நிதியும், ஜீப்கார்களும், டிரக்குகளும் இருப்பதுடன் ஆயுதங்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### ஜனநாயக விரோதிகள் முன்னணி

ஜனநாயகத்தில் இவர்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தியாவில் ஹிந்து பாஸிஸ்ட் ஸ்டேட் ஒன்றை அமைக்க வேண்டுமென்று நினைக்கின்றனர். காங்கிரஸின் ஜனநாயகக் கொள்கை, மகாத்மா காந்தி, பண்டித நேரு, முஸ்லிம்கள் விஷயத்தில் காட்டும் அனுதாபம் இவர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்தியாவில் முஸ்லிம்களுக்கு உரிமைகள், உத்தியோகங்கள் வழங்கவோ, ராணுவம், போலீஸ் இலாக்காக்களில் முஸ்லிம்களை சேர்க்கவோ இவர்கள் தயாரில்லை. ஓட்டுரிமைகூட முஸ்லிம்களுக்கு இருக்கக்கூடாது என்று சொல்லுகின்றனர். நிர்வாகத்தைக் கைப்பற்றி, ஹிந்து தர்ம ரக்ஷகர் என்று இவர்களால் அழைக்கப்படும் நேபாள மஹாராஜாவை இந்திய பிரதமராக்கி, பரத்பூர், ஆள்வார், பாட்டியாலா, ஜெய்ப்பூர், பீகானிர் மஹாராஜாக்களை இந்திய சர்க்கார் மந்திரிகளாக்க வேண்டுமென்பது இவர்களுடைய லட்சியம். அப்பொழுதுதான் ஹிந்து தர்மம் காக்கப்பட முடியும் என்று பிரசாரம் செய்யப்படுகின்றது. முஸ்லிம்கள் மிஸ்டர் ஜின்னாவை கண்மூடித்தனமாய் பின்பற்றியதைப்போல் ஹிந்துக்களும் இவர்களுடைய பிரசார வலையில் அகப்பட்டுக்கொண்டால் வருங்கால இந்தியா எப்படி இருக்குமென்று சொல்லுவதற்கில்லை. மிஸ்டர் ஜின்னாவின் சூழ்ச்சியையே இவர்களும் கையாள ஆரம்பித்துவிட்டனர்.

காங்கிரஸ் எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் இன்று இந்த முன்னணியில் ஒன்று திரளுகின்றன. இடைக்கால சர்க்காரில் நவாப்ஸாதா நிதி மந்திரியாக இருக்கையில் 95 சத விகிதம் வருமான வரியை விதித்தார். தன்னுடைய கொள்கையை ஒட்டி காங்கிரஸும் அதை ஆதரித்தது. ஹிந்து முதலாளி வர்க்கத்தை

மட்டந்தட்டும் நோக்கத்துடனேயே லியாகத் அலி கான் அப்படிச் செய்தார் என்பது நிச்சயம். இன்று பாகிஸ்தானிலுள்ள முதலாளிகள்மீது இந்த அளவு வரி விதிக்கப்படாமல் இருப்பதைப் பார்த்தால் அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. அது எப்படி இருப்பினும் முஸ்லிம்களுடன் சேர்ந்து காங்கிரஸ், முதலாளித்துவத்தை குழி தோண்டிப் புதைக்க முயற்சிக்கின்றது என்ற பயம் ஹிந்து முதலாளிகளுக்கு உண்டாகிவிட்டது. ஆகையால், இந்திய முதலாளிகள் காங்கிரஸுக்கு விரோதமாக ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம், ஹிந்து மஹாசபையை ஆதரிக்கின்றனர். துரதிஷ்டவசமாக இந்தியாவின் செல்வாக்குள்ள பத்திரிகைகளும் இந்த முதலாளிகளுக்கே சொந்தமாக இருக்கின்றன. காங்கிரஸுக்கு விரோதமாகவும், பண்டித நேருவைக் குறை கூறியும் இந்தப் பத்திரிகைகள் மெதுவாக பிரசாரம் செய்யவும் ஆரம்பித்துவிட்டன.

ஐக்கிய மாகாணம், பீகார் மகாணங்களில் ஜமீன் ஒழிப்புத்திட்டத்தைக் கொண்டுவந்து, வயிற்றையே பிரதானமாகக் கருதும் ஜமீன்தார்களின் எதிர்ப்பையும் காங்கிரஸ் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது காங்கிரசின் ஜனநாயகக் கொள்கையைக்கண்டு நடுங்கும் சமஸ்தானதிபதிபள் வேறு இருக்கின்றனர். இவர்களிடம் ஏராளமான பணமும், ராணுவமும் இருக்கிறது. பிற்போக்கு சக்திகளுக்கு இவர்கள் பின்பலமாக இருப்பதுடன் பணஉதவியும் செய்துவருகின்றனர். கிழக்கு பஞ்சாப் கலவரங்களை ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கமே திட்டம்போட்டு நடத்தியாகச் சொல்லப்படுகிறது. அங்குள்ள சமஸ்தானதிபதிகள் இவர்களுக்கு ஜீப்கள், ராணுவ லாரிகள் ஆயுதங்கள் கொடுத்துதவினர். டில்லி கலவரங்களுக்கும் அகதிகளை ஒன்று திரட்டி கலவரங்களை தூண்டியதற்கும் இவர்களே காரணமென்று தெரிகிறது

## ஜின்னாவின் சூன்யம்

எல்லாவற்றையும் விட போலீசிலும். ராணுவத்திலும இந்த மனப்பான்மை அதிகரித்து வருவது கவலையளிக்கக் கூடிய விஷயமாகும். முஸ்லிப களின் பிரச்னையில் மத்திய அரசாங்க உத்திரவுகளையும் இவர்கள் அலட்சியம் செய்கின்றனர். டில்லி கலவரங்களில் ஹிந்து, சீக்கிய கலகக்காரர்மீது சுடுவதை சாத்யமான அளவுக்கு இவர்கள் தவிர்த்தார்கள். முஸ்லிம்கள் கொள்ளையடிக்கப் படுவதை பார்த்துக் கொண்டு இருந்ததோடுமட்டுமின்றி அவர்களையே சுடவும் செய்தார்கள். பலூஜ் ரெஜிமெண்ட் மேற்கு பஞ்சாபில் கொள்ளையடிக்கப்பட்ட ஹிந்து, சீக்கியர்களையே சுட்டுத்தள்ளியதைப் போலவே சீக்கிய சிப்பாய்கள் டில்லியில். முஸ்லிம்களையே சுட்டுத்தள்ளினார்கள். மதராஸ் ரெஜிமெண்ட் தருவிக்கப்பட்ட பிறகே டில்லி கலவரங்கள் அடங்கின.

ஹிந்து, சீக்கிய ராணுவத்தால் முஸ்லிம்களை பாதுகாக்க முடியாமல் பண்டித நேரு மிகவும் கவலைப்பட்டார் இந்திய ராணுவம் பிரிக்கப்படாமல் முஸ்லிம்களும் அந்த ராணுவத்தில் இருந்திருந்தால், ராணுவத்தில் வகுப்புவாதம் நுழைந்திருக்க முடியாது. ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் சேர்ந்துள்ள ராணுவம் எந்த ஒரு வகுப்பாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ இருக்கமுடியாது. ஆனால் மிஸ்டர் ஜின்னாவின் அறிவை என்னவென்று சொல்லுவது! இந்திய ராணுவத்தை ஹிந்து ராணுவமாக்கிவிட்டு ராணுவத்திலிருந்த முஸ்லிம்களை பாகிஸ்தானுக்கு கொண்டுபோய் விட்டார். ராணுவம் பிரிக்கப்படாமலிருந்தால் டில்லி முஸ்லிம்கள் இவ்விதம் அழிந்திருக்கமுடியாது டில்லி முஸ்லிம்களின் நிலைமையை சமாளிக்க முஸ்லிம் ராணுவத்தை அமைக்கும்படி பண்டித நேருவுக்கு மிஸ்டர் ஜின்னா யோஜனை கூறியதுதான் இதிலுள்ள விசித்திரமானதொரு விஷயமாகும். என்னே! மிஸ்டர் ஜின்னாவின் அறிவு!

## சுயநல வாதி ஜின்னா

எனவே பிரிவினைக்குப்பிறகு இந்திய பிற்போக்குவாதிகளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது பாகிஸ்தானைக்காட்டி பாமரமக்களை மயக்கும் நல்ல ஆயுத்தை அவர்கள் இழக்கமுடியாது. பாகிஸ்தான் அமையாமல் போயிருந்தால் இந்தியா ஸோஷியலிஸ, ஜனநாயக நாடாக இருப்பதை எதிர்க்க இவர்களால் முடியாமல் போயிருக்கும். இனி இவர்கள் பாகிஸ்தானை எதித்து தாக்கவோ மீண்டும் ஐக்கிய இந்தியாவை உருவாக்கவோ தயாராக இல்லை. இந்திய ஐக்கியத்திற்கு பிறகு "ஹிந்து ராஜ்யம்" என்று பாமர மக்களை தங்கள் பக்கம் திருப்ப இந்த பிற்போக்காளர்களால் முடியாமல் போய்விடும் என்பது அவர்களுக்கே நன்றாய் தெரியும். "ஹிந்து ராஜ்ய" கோஷத்திற்கு சந்தர்ப்பமளித்தவர்கள் முஸ்லிம்கள் தான். ஹிந்து ராஜ்யம் அமைந்தால் முதல் அடி பாகிஸ்தானத்துக்குத்தான் என்பதில் சந்தேகமில்லை எப்படி இருப்பினும் ராஜாக்கள், மஹாராஜாக்கள், ஜமீந்தார்கள் முதலாளிகள் முதலிய பிற்போக்காளர்களுக்கு இந்தியப் பிரிவினை நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருப்பது உண்மை.

(தொடரும்)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, East Madalangudi Street, Kumbakonam Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.